Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 கார்த்திகை 19 ஹிஜ்ரி 1428 ஷவ்வால் 31 (04.12.2005) ஞாயிற்றுக்கிழமை இதழ் 65




# இராணுவத்தினரை இலக்குவைத்து குடாநாட்டில் நேற்றும் தாக்குதல்கள்

யாழ்ப்பாணம்

யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நேற்றும் இராணுவக் காவலரண்கள் மற்றும் இராணுவ வாகனங்களை இலக்கு வைத்து கிரனேட் தாக்குதல்களும், துப்பாக்கிப் பிரயோகங்களும் நடத்தப்பட்டன.

இந்தச் சம்பவங்களில் இராணுவத் தரப்பில் ஒருவர் கொல்லப் பட்டதாகவும் மேலும் பலர் காயமடைந்ததாகவும் தகவல்கள் தெரி வித்தன.

நீர்வேலியில் இரு அப்பாவி இளைஞர்கள் ஆயுதக் குழுவினரால் படுகொலை செய்யப்பட்டதையடுத்து நேற்றுமுன்தினம் பல்வேறு இடங் களிலும் படையினரை இலக்குவைத்து கைக்குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இந்தநிலையில் நேற்றும் பல இடங்களில் படையினர் மீதான தாக்குதல்கள் தொடர்ந்தன. (12 ஆம் பக்கம் பார்க்க)

## விமல் வீரவன்சவுக்கு பாதுகாப்பு அதிகரிப்பு!

கொழும்பு

ஜே.வி.பியின் பிரசார செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல்வீர வன்சவுக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட் டுள்ளது.

இதற்கமைய அமைச்சர்களுக்கான பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த 20 அதிகாரி களை அவரின் பாதுகாப்புக்கென வழங்குவ தற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வரு வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதவிர இரண்டு வாகனங்களும் விமல் வீரவன்சவுக்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

## 16ம் திகதி மகிந்த இந்தியா பயணம்!

கொழும்பு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்று நாள் விஜயமாக எதிர்வரும் 16 ஆம் திகதி இந்தியா செல்லவுள்ளார்.

இந்தியப் பயணத்தின்போது விடு தலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகள் மற்றும் இந்திய - இலங்கை உறவுகள் தொடர்பாக அவர் இந்தியத் தலைவர்களுடன் ஆலோ சனை நடத்துவார்.

இருப்பினும், மகிந்த ராஜபக்ஷவின் இந் தியப் பயணம் தொடர்பாக உறுதி யான அறி விப்பு எதுவும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் இளைஞர்கள் இருவர் தோப்பூரில் வெட்டிக்கொலை!

திருகோணமலை

திருகோணமலை தோப்பூர் பகுதியில் நேற் றுப் பகல் முஸ்லிம் ஆயுதக் குழுவொன்றி னால் இரண்டு தமிழ் இளைஞர்கள் வெட்டிக்கொலை செய்யப்பட்டு வீதியில் போட்டு எரிக்கப்பட்ட துடன் - மற்றொருவர் வெட்டுக்காயத்திற்கு இலக்கானதையடுத்து அந்தப் பகுதியில் கடும் பதற்றநிலை தோன்றியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் திருமலை பள்ளிக்குடியி ருப்பைச் சேர்ந்த ஓட்டோ சாரதியான சுந்தரலிங் கம் இளங்கோவன் (வயது 29) மற்றும் சங்கர் ஆகிய இருவருமே வெட்டிக்கொலை செய்யப் பட்டு எரிக்கப்பட்டவர்களாவர்.

இராமலிங்கம் (வயது 43) என்பவர் வெட் டுக்காயங்களுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்

இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக் கிப் பிரயோகத்தில் படுகாயமடைந்து, திரு கோணமலை பொது வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவத்தையடுத்து தோப்பூர் வீதி யால் ஓட்டோவை செலுத்திச்சென்ற இளங் கோவனும், மற்றும் வீதியால் சென்று கொண் டிருந்த சங்கர் என்பவரும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொறிக்குள் தள்ளுகிறார் மகிந்த!

### வைகோ எச்சரிக்கை

சென்னை

செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

## நீர்வேலியில் தொடரும் மறியல்; போக்குவரத்துகள் பாதிப்பு!

யாழ்ப்பாணம்

நீர்வேலிப்பகுதியில் இரண்டு அப்பாவி தமிழ் இளைஞர்கள் ஆயுதக்குழுவினரால் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று இரண்டாவது நாளாகவும் நீர்வேலியை சூழவுள்ள பிரதே சங்களில் வீதிமறியல், ரயர் எரிப்பு சம்பவங்கள் தொடர்ந்ததால், யாழ் - பருத்தித்துறை மற்றும் இராச வீதி ஊடான போக்குவரத்துக்கள் பெரி தும் பாதிக்கப்பட்டன.

யாழ் - பருத்தித்துறை வீதியில் நீர்வேலிச் சந்தி, அத்தியார் இந்துக்கல்லூரிப் பகுதி, நீர்வேலி கந்தசுவாமி கோவிலடி, சிறுப்பிட்டி வைரவர் கோவிலடி ஆகிய இடங்களிலும் , இராச வீதியில் மாசிவன் சந்தி, கரந்தன் சந்தி, நவக்கிரி சந்தி ஆகிய இடங்களிலும் முட்கம்பி கள் மின் கம்பங்கள் , மரங்கள் வீதிக்கு குறுக்கே போடப்பட்டு - ரயர்கள் எரிக்கப்பட்டன. இதனால் இந்த வீதிகள் ஊடான போக்குவரத்துக்கள் அனைத்தும் முற்றாகத் தடைப்பட்டன.

இதனால் பருத்தித்துறை - யாழ்ப்பாணம், அச்சுவேலி - யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங் களுக்கு இடையிலான போக்குவரத்து சேவை யில் ஈடுபடும் அரச, தனியார் பயணிகள் பஸ்கள்

கம் இளங்கோவன் (வயது 29) மற்றும் சங்கர் ஆகிய இருவருமே வெட்டிக்கொலை செய்யப்பட்டு எரிக்கப்பட்டவர்களாவர்.

இராமலிங்கம் (வயது 43) என்பவர் வெட்டுக்காயங்களுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எரிக்கப்பட்ட இரண்டு சடலங்களும் மூதூர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

ஐ.தே.கட்சியின் தோப்பூர் பிர தேச அமைப்பாளரான காஜா மொகைதீன் நேற்றுக்காலை

# பொறிக்குள் தள்ளுகிறார் மகிந்த!

## வைகோ எச்சரிக்கை

சென்னை —

இலங்கையின் சமாதான முயற்சிகளில் இந்தியாவைத் தலையிடுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கோரியிருப்பது ஒரு பொறி என்றும், இதன்மூலம் சமாதான முயற்சிகளை தடம்புரள வைக்கும் நடவடிக்கையில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாகவும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் -

சமாதான முயற்சிகளை வலுப்படுத்துவதோ அல்லது தமிழ் மக்களுக்கு நீதியான தீர்வை வழங்குவதோ ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நோக்கமல்ல. (12 ஆம் பக்கம் பார்க்க)

இந்த வீதிகள் ஊடான போக்குவரத்துக்கள் அனைத்தும் முற்றாகத் தடைப்பட்டன.

இதனால் பருத்தித்துறை - யாழ்ப்பாணம், அச்சுவேலி - யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களுக்கு இடையிலான போக்குவரத்து சேவையில் ஈடுபடும் அரச, தனியார் பயணிகள் பஸ்கள் புத்தூர் சந்தியூடாக திரும்பி பலாலி வீதி வழியாக யாழ். நகருக்கு வந்தடைந்தன.

இறந்தவர்களின் பூதவுடல்கள் தகனம் செய்யும்வரை தமது போராட்டம் தொடருமென மறியலில் ஈடுபட்டிருந்த இளைஞர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை இந்தச் (12 ஆம் பக்கம் பார்க்க)

# போர் நிறுத்த மீளாய்வு அவசியமில்லை!

## சர்வதேச மன்னிப்புச்சபை செயலரிடம் தமிழ்ச்செல்வன்



கிளிநொச்சி —

போர்நிறுத்த உடன்பாட்டை மீளாய்வு செய்யவேண்டிய அவசியம் இல்லை. இந்த உடன்பாட்டை அரசு முழுமையாகச் செயற்படுத்துவதன் மூலமே தமிழர் தாயகத்தில் மனித உரிமை மீறல்களையும் - வன்முறைகளையும் முடிவுக்குக் கொண்டுவர முடியும் என்று விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் - சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் ஐரெனி சுபைடா கானிடம் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று சு.ப.தமிழ்ச்செல்வனை சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் ஐரெனி சுபைடா கான் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பின்போது தமிழர் தாயகத்தில் நிலவும் அரசியல் நிலைமைகள் குறித்து அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் விளக்கினார்.

இரு தசாப்த கால யுத்தத்தால் சமூக, பொருளாதார அடிப்படையில் பாதிக்கப்பட்டு இடப்பெயர்வுக்குள்ளாகி, மனித உரிமைகள் மறுக்கப்பட்டு வரும் தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாக இயல்பு நிலைக்குத் திரும்ப யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாகச் செயற்படுத்துவதன் மூலமே சாத்தியம் என்றும் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறினார்.

அதிகரித்து வரும் கொலைகள், குறைந்த வயதுடையோர் படையில் சேர்ப்பு ஆகிய விடயங்களில் தமது கவலையைத் தெரிவித்த ஐரெனி சுபைடா கான் - வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவர சர்வதேச விதிமுறைகளுக்கு அமைய கண்காணிப்புக் கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பாகவும் தனது கருத்துக்களை சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பகிர்ந்து கொண்டார்.

(11 ஆம் பக்கம் பார்க்க)

APC ஆனந்தா பிறைவேற் கிளினிக்

எமது சேவைகள் 1.வீடுகளுக்குச் சென்று நோயாளிகளைப் பார்வையிடல் 2. பெண் நோயாளர்கள் பெண் வைத்தியரிடம் ஆலோசனை பெறும் வசதி (தினமும் மாலை)

(C/4385) 173, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021-222 8144

ஆலோசனை நேரம்:
(திங்கள் - சனி) காலை 6.00 முதல் இரவு 9.00 வரை
ஞாயிறு காலை 6.00 முதல் காலை 10.00 வரை
மாலை 5.00 முதல் இரவு 9.00 வரை



# யாழ்ப்பாணத்தில் 143 கிராம அலுவலர்களுக்கு 2006 ஜனவரி முதல் உள்ளக இடமாற்றம்!

யாழ்ப்பாணம்

யாழ்.மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் கடமை யாற்றும் கிராம அலுவலர்கள் அடுத்த ஆண்டு ஜனவரி முதல் உள்ளக இட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்ட அரச அதிபரினால் செய்யப்பட்டுள்ள இந்த இடமாற்றத் தின் மூலம் இடமாற்றம் செய்யப்பட்ட 143 கிராம அலுவலர்களின் பெயர் கள் மற்றும் அவர்கள் கடமையாற்ற வேண்டிய புதிய இடங்களும் வரு மாறு :

**உதவி அரசாங்க அதிபர் பிரிவு வேலணை**

கு.சந்திரா - (நல்லூர்-ஜே/124), ம.அம்பிகைபாகன் - (ஊர்காவற் றுறை - ஜே/58), க.பரமேஸ்வரன் - (நல்லூர் - ஜே/127), வி.குலசிங்கம் - (நல்லூர் - ஜே/107), ப.விநாயக மூர்த்தி - (ஊர்காவற்றுறை - ஜே/ 53), ந.தனபாலசிங்கம் - (யாழ்ப்பா ணம் - ஜே/76), திருமதி இ.பரமேஸ் வரன் -

(நல்லூர் - ஜே/119), இ. ரமேஷ் - (உடுவில் - ஜே/194, செ. சிவா - (சாவகச்சேரி - ஜே/338), ஜே. பி.சேவியர் - (கோப்பாய் - ஜே/272), சி.இரட்ணேஸ்வரன் - (யாழ்ப்பா ணம் - ஜே/87), கா.கணேசலிங்கம் - (ஊர்காவற்றுறை - ஜே/37), பி. அ.மரியதாஸ் - (சண்டிலிப்பாய் - ஜே/ 143).

**உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஊர்காவற்றுறை**

க.சகாதேவன் - (நல்லூர் - ஜே/ 111), சி.கணபதிப்பிள்ளை - (நல்லூர் - ஜே/123), யோ.பத்திநாதன் - (யாழ்ப் பாணம் - ஜே/68), எஸ்.எம். தர்ம லிங்கம் - (கரைநகர் - ஜே/41), டி. றெ.ஜெயதரன் - (யாழ்ப்பாணம் - ஜே/73), வ.வடிவழகையன் - (காரைநகர் - ஜே/42), க.இராமேஸ் வரன் - (வேலணை - ஜே/10).

**உதவி அரசாங்க அதிபர் பிரிவு காரைநகர்**

தி.சிறிஸ்கந்தராசா - (நல்லூர் - ஜே/126), இ.இராசதுரை - (சங்கானை - ஜே/180).

**உதவி அரசாங்க அதிபர் பிரிவு யாழ்ப்பாணம்**

இ.கமலவேணி - (யாழ்ப்பாணம் - நல்லூர் - ஜே/120), சி.ரவீந்திரதாஸ் - வேலணை - ஜே/17), இ.சிவானந் தன் - (வேலணை - ஜே/36), சூ.ஞா னசேகரன் - (வேலணை - ஜே/30), செ.யூலன் - (வேலணை - ஜே/28), க.விஜயரெட்ணம் - (வேலணை - ஜே/27).

**உதவி அரசாங்க அதிபர் பிரிவு நல்லூர்**

க.பஞ்சலிங்கம் - (வேலணை - ஜே/21), க.யோகேஸ்வரன் - (சங் கானை - ஜே/178), சி.பன்னீர்ச்செல் வம் - (வேலணை - ஜே/26), க.முரு கையா - (சங்கானை - ஜே/158), வ. சந்திரசேகரம் - (ஊர்காவற்றுறை - ஜே/60), ச.பாலசிங்கம் - (கரவெட்டி - ஜே/368), ப.வசந்தகுமார் - (சங் கானை - ஜே/179),

த.இரத்தினேஸ் வரன் - (உடு வில் - ஜே/191), இ.சந்திரகுமார் - சாவ கச்சேரி - ஜே/328), வீ.வேலா யுதசே யோன் - (உடுவில் - ஜே/207), திரு மதி ப.சேய்மானந்தன் - (உடுவில் - ஜே/211), கு.சாந்தமோகன் - (தெல் லிப்பழை - ஜே/213), வ. சுந்தர லிங்கம் - (ஊர்காவற்றுறை - ஜே/ 54), ம.தயாபரன் - (சங்கானை - ஜே/181), ந.தவநேசன் - (மருதங் கேணி), போ.இ.ஜேசுதாசன் - (வேல ணை - ஜே/31).

**உதவி அரசாங்க அதிபர் பிரிவு சண்டிலிப்பாய்**

தி.நித்தியானந்தன் -(சங்கானை- ஜே/171), இ.துரைராசா - (சங்கானை - ஜே/157), பி.நிரூபன் - (சங்கானை - ஜே/176), க.சுதர்சன் - (ஊர்காவற் றுறை - ஜே/49), வி.கே.தனபால - (வேலணை - ஜே/18), லோ.அருள் ராஜ் - (வேலணை- ஜே/23), ச. சிறிஸ்கந்தராசா - (சங்கானை - ஜே/ 174)

**உதவி அரசாங்க அதிபர் பிரிவு சங்கானை**

க.ஜெகதீசன் - (உடுவில் - ஜே/ 210), க.சிறீகரன் - (சண்டிலிப்பாய் - ஜே/150), வி.ரி.கதிர்காமநாதன் - ( கோப்பாய் - ஜே/269), ச.வைத்திய நாதன் - (உடுவில் - ஜே/193), இ. ஶ்ரீரஞ்சன் - (உடுவில் - ஜே/198), ஜெ.கதிர்காமநாதன் - (சாவகச்சேரி - ஜே/329),

ம.ஶ்ரீமுருகவேள் - (சாவ கச்சேரி - ஜே/325), ந.மகிழ்ராஜா - (உடுவில் - ஜே/205), ந.சர்வானந் தன் - (தெல்லிப்பழை - ஜே/215), திருமதி இ.குலவீரசிங்கம் - (கோப் பாய் - ஜே/286), திருமதி தி. சிவபாக் கியநாதன் - (சண்டிலிப்பாய் - ஜே/ 141), சீ.ஜுவராஜா - (உடுவில் - ஜே/ 188), கு.லலிதாம்பாள் - (உடுவில் - ஜே/192), க.குலசிங்கம் - (சாவகச் சேரி).

*(மிகுதி தொடரும்...)*

# மனித உரிமைக் குழு அதிகாரிகள் நெடுந்தீவுக்கு விஜயம் செய்தனர்!

நெடுந்தீவு

நெடுந்தீவு பிரதேச மக்கள் மீது கடற்படையினர் மேற்கொண்ட தாக் குதல்கள், சித்திரவதைகள் தொடர் பாக கடந்த வியாழக்கிழமை மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி கள் நெடுந்தீவுக்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரடியாக ஆராய்ந் தனர்.

கடந்த 20 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை கடற்படைச் சிப்பாய் ஒருவர் காணாமற் போனதாகத் தெரி வித்து கடற்படையினர் வீதியால் சென்ற மக்களைத் தாக்கியதுடன் கைது செய்து கொட்டும் மழையில் வைத்து விசாரணைகளை மேற் கொண்டனர்.

இது தொடர்பாக மனித உரிமை கள் ஆணைக்குழுவுக்கு முறைப்பா டுகள் செய்ததையடுத்தே இவர்கள் நெடுந்தீவுக்கு விஜயம் செய்தனர்.

இதன்போது கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டு தாக்கப்பட்டவர் கள், கைது செய்யப்பட்டவர்கள் மற் றும் பெண்கள், குழந்தைகள் ஆகி யோரை இரவு வேளையில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற் கொண்டவர்கள் போன்றோரை தனித்தனியாகச் சந்தித்து நிலைமை களையும் சம்பவங்களையும் அறிந்து கொண்டனர்.

பாதிக்கப்பட்டவர்கள் தனித்தனி யாகவோ, கூட்டாகவோ தமது முறைப் பாடுகளைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

மனித உரிமை ஆணைக்குழு வின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் ரோகித பிரியதர்சன மற்றும் ஆணைக் குழுவின் அதிகாரிகள் மக்களின் நிலை மைகளை ஆராய்ந்தனர். (113)

# புத்தொளி சிவபாதத்தின் நினைவஞ்சலிக் கூட்டம்!

மானிப்பாய்

ஆனைக்கோட்டை புத்தொளி சிவ பாதம் காலமாகி ஓராண்டு நிறைவை யொட்டி இன்று மாலை 4 மணிக்கு ஆனைக்கோட்டை அமெரிக்கன் தமிழ்க் கலவன் பாடசாலையில் க.சுப் பிரமணியம் தலைமையில் அஞ்ச லிக்கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் - தமிழ்த் தேசி யக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ், யாழ். மாவட்ட ஓய்வுபெற்ற முன்னாள் மேலதிக அரச அதிபர் து.வைத்தியலிங்கம்,

இலங்கை தமிழர் ஆசிரியர் சங் கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் உட்பட மேலும் பல பிரமுகர்களும் அஞ்சலி உரை நிகழ்த்தவுள்ளனர். (100)

## சித்தன்கேணியில் பவளவிழா!

யாழ்ப்பாணம்

வட்டுக்கோட்டை வடக்கு சித்தங் கேணி கற்பகச்சோலை நன்மைவிருத் திச் சங்க பவளவிழா நிகழ்வு இன்று மாலை 4மணியளவில் கற்பகச்சோலை நன்மை விருத்திச்சங்க அரங்கில் தலைவர் பொ.கிருஷ்ணசாமி தலை மையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், யாழ்.பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், யாழ்ப்பாண மக ளிர் அபிவிருத்தி நிலையப்பணிப்பாளர் சறோஜா சிவச்சந்திரன் ஆகியோர் பிர தம விருந்தினராக கலந்து கொள்ள வுள்ளனர்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநா தன், வலிமேற்கு பிரதேச செயலாளர் மோகன்றாஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ள வுள்ளனர். (207)

## நிர்வாகசபைக் கூட்டம்!

மானிப்பாய்

நூலக விழிப்புணர்வு நிறுவகத் தின் நிர்வாக சபைக்கூட்டம் இன்று மாலை 2 மணிக்கு அதன் தலைவர் அ.ஶ்ரீ காந்தலட்சுமி தலைமையில் யாழ்.பொதுசன நூலகத்தில் நடை பெறவுள்ளது.

நிறுவகத்தின் உறுப்பினர்களை தவறாது சமுகமளித்து ஆலோசனை கள் வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது. இதேவேளை - மாலை 4 மணிக்கு நூலுக்கு ஒருமாலை நிகழ்ச்சியும் இடம் பெறவுள்ளது. (100)


நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

நமது ஈழநாடு நடாத்தும்
க.பொ.த (சாதாரண தரம்) - 2005 பரீட்சைக்குத்
தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான
இலவச முன்னோடிக் கருத்தரங்கு.

இடம் : யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - குமாரசுவாமி மண்டபம்
காலம் : 04.12.2005. இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை (புதிய நேரம்)

அனுசரணை வழங்குபவர்கள்:

D.S.I
Show Room,
426, Hospital Road, Jaffna.

S T P
Your Partner in It Solution
73, Palaly Road, Kantharmadam, Jaffna.

I.D.M
Computer Centere
216, Navalar Road, Jaffna.
Tel: 021 4591398,
Fax: 021 4591398
E.mail: idmjaffna@idm.lk,www:idm.lk

SRI MURUGAN
WESTERN UNION
பணப் பரிமாற்றம்
Communication & Agency Post Office
303, K.K.S. Road, Jaffna.
T.P: 021 2222670, 5392
Hot line : 0777427182
Fax: 021 2223214, 3435
E.mail:srimurugan@eureka.lk

உங்கள் விலைத் தெரிவுக்கேற்ப
P IV ,P III COMPUTERS
Call us @ 077667108
448,K.K.S ROAD,JAFFNA
MARSHA SYSTEMS

LONDON ENGLISH COLLEGE
105, Arasady Road, Jaffna.
T.P: 021 2225889
தரம் 1-6 வரையான ஆங்கில வகுப்புக்கள.
தரம் 8 ஆங்கில வகுப்புக்கள்
IELTS O/L, A/L English Literature
Spoken English Diplama in English

YTS
யாழ் ரெக்
இல.3, சேர் பொன் இராமநாதன் வீதி, கலட்டிச்சந்தி.
(யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில்)

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
T.P: 021 22 5542
212, K.K.S. Road, Jaffna.

குறிப்பு : தொடர்ச்சியாக கருத்தரங்கு நடைபெறவிருப்பதால் மாணவர்கள் மதிய உணவுடன் வரவும்.



சிறு விளம்பரம்

தொடர்பு கொள்ளவும்

A40 CN - 9086 இலக்க முடைய கார் உரிமையாளர் புத்தகம் சம்பந்தமாக தொடர்பு கொள்ளவும்.
T.P 0777 - 491062

சுன்னாகம் நாகம்ஸ்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினவெளியீடு
அக்ஷன் கிங்அர்ஜுன், நமீதா மற்றும் பலர் நடித்த





காட்சிகள்:-11.00,3.00,7.00, 9.30, 1.00 (பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை
தனுஷ், பிரியாமணி மற்றும் பலர் நடித்த
அது ஒரு கனாக்காலம்
காட்சிகள் 11.00, 2.45, 5.00 (புதிய நேரம்)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
இந்தியாவிலும் இலங்கையில் ஒரே தின வெளியீடு
சியாம், சினேகா, அபர்ணா நடித்த
ABCD
காட்சிகள்;-10.30, 2.30,6.30, 9.00 (புதிய நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்
ஜெயம் ரவி, ஸ்ரேயா, வடிவேல் மற்றும் பலர் நடித்த
மழை
காட்சிகள்:-10.30,2.30, 6.30, 9.30 (பு.நேரம்)

மணப்பெண் அலங்கார வகுப்பு
வெள்ளவத்தை Nature Way இல் மணப்பெண் அலங்கார Facials Wedding Structures, Rich Cakes, B' days Cake, தையல் Flower Decorations என்பவற் றுக்கான Orders ஏற்றுக்கொள்ளப் படும். இவற்றுக்கான வகுப்புக்கள் சான்றிதழ்களுடன் நடைபெறுகின் றன. T.Luxmy, 18 B Station Road, Wellawatta. Tel : 2505325. (2122)


மனோகரா திரையரங்கு யாழ்ப்பாணம்
யாழ்.மாவட்டத்தில் முதன்முறையாக DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்
5ஆவது வெற்றி வாரமாக...
இளைய தளபதி விஜய் வெடிக்கும்





சிவகாசி
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

விலாச மாற்றம்
எரிக்கணேஷ் 86, கே.கே.எஸ் வீதிக்கு (பழைய பொலீஸ் ஸ்டேஷன் முன்பாக) மாற்றப்பட்டுள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.
எரிக்கணேஷ்,
86, கே.கே.எஸ் வீதி,
(பழைய பொலீஸ் ஸ்டேஷன் முன்பாக)
சுன்னாகம்.

(C/4895)

சன நூலகம்
யாழ்ப்பாணம்



# தமிழரின் குமுறல்கள் உணர்வலையாக எழுந்தால் தேசத்துரோகிகள் மண்ணைவிட்டு ஓடும் நிலை வரும்

## திருமலை மக்கள் பேரவை

திருகோணமலை—

யாழ்.குடாநாட்டில் இராணுவத்தினரும், அவர்களுடன் சேர்ந்து இயங்கும் ஆயுதக்குழுவினரும் இணைந்து நடத்தும் நிழல் யுத்தத்தின் ஓர் அங்கமாக பொது மக்கள் மீதான படுகொலைகள் தொடர்கின்றன என திருகோணமலை தமிழ் மக்கள் பேரவையினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது குறித்து அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

இரண்டு பாடசாலைகளின் அதிபர்கள் படுகொலை செய்யப்பட்டபின், நெடுந்தீவு பிரதேசத்தில் தமிழீழ மாவீரர் நிகழ்வில் பங்குபற்றியோர் மீது கடுமையான தாக்குதல்கள் நடைபெற்றது. தற்போது ஒன்றுமறியாத அப்பாவி ஏழை விவசாயிகள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

1979 ஆம் ஆண்டு அரசின் அப்போதைய ஜனாதிபதி ஜெயவர்த்தன தனது மருமகனான பிரிகேடியர் வீரதுங்காவை அனுப்பி, அவர் தலைமையில் இவ்வாறான படுகொலைகள் பல அரங்கேற்றப்பட்டமையாலேயே எமது விடுதலைப் போராட்டம் வலுப்பெற்றது. இன்று யாழ். குடாநாட்டில் படையும், துணைப் படைகளும் சமாதானத்தைக் குழப்ப வேண்டுமென்று திட்டமிட்டு, இவ்வாறான படுகொலைகளை நடத்துகின்றனர்.

சுட்டுக்கொல்லப்பட்ட இருவரும் தமிழீழ மாவீரர்நாள் நிகழ்வில் தீவிரமாகப் பங்கேற்றவர்கள் என அறிய முடிகிறது. தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்து செயற்படும் தமிழ் மக்களுக்குத் தண்டனை - கொலை என்று தீர்மானிக்கப்பட்டு, செய்யப்படும் இந்தச் செயல் மூலம் தமிழ் மக்களை அச்சுறுத்தலாம் என எண்ணுகிறீர்கள். ஆனால், தாயக மண்ணிலிருந்து துணைப்படைகளும், துரோகிகளும் ஓடும் நாள் மிக விரைவிலேயே உள்ளது. எனவே, அதற்கிடையே உங்கள் அராஜகத்தைச் செய்ய நினைக்காதீர்கள்.

எமது தாயக மண்ணில் நடைபெறும் இந்த ஈனச் செயல்களுக்கு எதிராக ஒட்டுமொத்த தமிழ் மக்களின் உள்ளக் குமுறல்கள், உணர்வலைகளாக வெளிக்காட்டப்படும்போது தேசத்துரோகிகள் படைகளுடன் சேர்ந்து தாயக மண்ணிலிருந்து ஓடவேண்டிய நிலை ஏற்படுமென்பதை மறவாதீர்கள் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## விசா முறைகேடுகள் 59 இலங்கையர் கைது!

கொழும்பு—

விசா முறைகேடுகள் தொடர்பாக 59 இலங்கையர் கைது செய்யப்பட்டிருப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு விண்ணப்பிக்கப்பட்ட 13 ஆயிரம் விண்ணப்பங்களில் சந்தேகத்துக்குரிய 987 விண்ணப்பங்கள் மீது விசாரணை நடத்தப்பட்டன.

விசா பெறுவதற்காக போலியாக அவணங்களைச் சேர்த்தது தொடர்பில் 59 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 4பேர் போலித் திருமணச் சான்றிதழ் கொடுத்ததாகவும், 12பேர் போலியாக வேலை வாய்ப்புச் சான்றிதழ் கொடுத்ததாகவும், 4பேர் போலியான மாணவர் விசாவுக்கு விண்ணப்பித்திருந்தனர் என்றும் அமெரிக்கத் தூதரகச் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

கடந்த 2004 ஆம் ஆண்டு விசா முறைகேடுகள் தொடர்பாக 84 பேர் கைது செய்யப்பட்டதாகவும் அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## லண்டனில் 10 மில்லியன் பவுணுக்கு மாளிகை; வெளியான செய்திக்கு சந்திரிகா மறுப்பு!

கொழும்பு—

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - லண்டனில் இளவரசர் ஆன்ட்ரூவின் மாளிகையை 10 மில்லியன் பவுன்ஸ்கள் விலைக்கு வாங்கியதாக வெளியாகிய செய்தி ஆதாரமற்றது என்று கூறி சந்திரிகா குமாரதுங்க மறுத்துள்ளார்.

இங்கிலாந்திலிருந்து வெளியாகும் ஈவினிங் ஸ்டாண்டர்ட் என்ற பத்திரிகையில் இது தொடர்பிலான செய்தியொன்று வெளியானது.

இளவரசர் ஆன்ட்ரூவின் சௌத்யார்க் பகுதியிலுள்ள சனின்ஹில் மாளிகையை, இங்கிலாந்து அரசியாரின் 2 ஆவது மகனான இளவரசர் ஆன்ட்ரூவிடமிருந்து சந்திரிகா குமாரதுங்க வாங்கியதாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேலும் பாரிசில் சந்திரிகா 2 அடுக்கு மாடிக் குடியிருப்புகளை வாங்கியுள்ளதாகவும், அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

பிரிஸ்டல் பல்கலைக்கழகத்தில் கால்நடை மருத்துவராகத் தெரிவாகியிருக்கும் தன் மகனுக்காக லண்டனுக்கு அருகில் ஒரு வீட்டை வாங்கியிருப்பதாகவும், சந்திரிகாவின் மகள் இங்கிலாந்தில் மருத்துவராக இருப்பதாகவும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இந்தச் செய்தியை சந்திரிகாவின் அலுவலகம் மறுத்துள்ளது. சந்திரிகாவுக்குச் சொந்தமாக வெளிநாட்டில் எந்தச் சொத்தும் இல்லை என்றும், இந்தச் செய்தியை வெளியிட்ட பத்திரிகை மீது சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் சந்திரிகாவின் அலுவலக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் சந்திரிகாவின் மறுப்பு அறிக்கை, சட்டபூர்வ நடவடிக்கை தொடர்பான தாக்கல் மனு எதுவும் தங்களுக்குக் கிடைக்கவில்லை என்றும், தாங்கள் வெளியிட்ட செய்தி உண்மை தான் என்றும் ஈவினிங் ஸ்டாண்டர்ட் நிர்வாகம் தெரிவித்துள்ளது.



இந்தச் சர்ச்சை தொடர்பாக இங்கிலாந்து அரசியாரின் பக்கிங்காம் அரண்மனைத் தரப்பிலிருந்து எந்தவித கருத்தும் தெரிவிக்கப்படவில்லை.

## சந்திரிகாவின் செலவினங்களுக்காக 29 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு!

கொழும்பு—

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் செலவினங்களுக்காக - 29 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதற்கு உயர் நீதிமன்றம் கவலை தெரிவித்துள்ளது.

2006 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையுடனான துணை அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், இதன் சட்டரீதியான அங்கீகாரம் தொடர்பாக விளக்கமளிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தாக்கல் செய்திருந்த மனு மீதான விசாரணையில், நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி சரத்.என்.டி.சில்வா இந்தக் கருத்துகளை வெளிப்படையாகத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஒருவருக்காக மட்டும் ஒதுக்கப்படுகிற இந்தத் தொகையான 29 மில்லியன் ரூபா அளவில்தான் தலைமை நீதிமன்றின் 10 நீதிபதிகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வளவு பெருந்தொகையை ஒரு தனிமனிதருக்காக ஒதுக்கீடு செய்வதைத் தாம் அங்கீகரிக்கப் போவதில்லை என்றும் சரத் என்.டி.சில்வா கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி டி.பி. விஜயதுங்கவுக்கு 6 மில்லியன் ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டது என்றும் சரத் என்.டி.சில்வா சுட்டிக் காட்டினார்.

மகிந்த ராஜபக்ஷவின் முறைப்பாடு தொடர்பிலான விளக்கத்தை மகிந்த ராஜபக்ஷவுக்கும், நாடாளுமன்ற சபாநாயகருக்கும் அனுப்பிவைக்க தலைமை நீதிமன்றம் முடிவுசெய்துள்ளது.

## ஐ.தே.க. தலைமைப் பொறுப்பிலிருந்து ரணில் விலகுவதற்கு நிபந்தனை விதிப்பு



கொழும்பு—

ஐ.தே.கட்சியின் தலைமைப் பொறுப்பிலிருந்து ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 6ஆம் திகதி விலகவேண்டுமென அந்தக் கட்சியின் பெருமளவான நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிபந்தனை விதித்துள்ளனர்.

தலைமைப் பொறுப்பிலிருந்து ரணில் விக்கிரமசிங்க விலக மறுத்தால், அவருக்கு எதிரான ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைவர் ஒருவர் இல்லாமல் சுதந்திரமாக இயங்க முடிவெடுத்துள்ளதாக ருக்மன் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க தலைமைப் பதவியிலிருந்து விலக வேண்டுமென கட்சியின் பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கையெழுத்து வாங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். சுமார் 45 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணில் கட்சித் தலைமையிலிருந்து விலகுவதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

அகிலா விராஜ், கபீர் ஹாசிம், திஸ்ஸ அத்தநாயக்க, ஜோன்ஸன் பெர்னாண்டோ, ஜோன் அமரதுங்க மற்றும் ஜோசப் மைக்கல் பெரேரா ஆகியோரே ரணிலுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் காலத்தில் ஜனாதிபதியாகவோ அல்லது பிரதமராகவோ வருவதற்கு ரணிலிடம் எந்தவித திட்டமும் இல்லை. எனவே, அவர் உடனடியாகப் பதவி விலகவேண்டுமெனவும் ருக்மன் சேனநாயக்க தெரிவித்தார்.

ஐ.தே.கட்சியின் தலைவராக இருக்கும் ரணில் வெற்றிகரமாக கடந்த 13 வருடங்களாக கட்சியை வழி நடத்தவில்லையென மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான காமினி லொக்குகே தெரிவித்தார்.

## சமாதான அனுசரணைப்பணியில் நோர்வே இடம்பெறக்கூடாது!

### ஹெல உறுமய வலியுறுத்து

கொழும்பு—

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகுமாயின், அதில் நோர்வே அரசு அனுசரணைப் பணியில் இடம்பெறக்கூடாது என்று ஜாதிகஹெல உறுமய - ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

சமாதான முயற்சிகளில் மூன்றாம் தரப்பின் அனுசரணைப் பணி அவசியமாகும். எனினும், அந்தப் பணியை இனியும் நோர்வே முன்னெடுத்துச் செல்லக்கூடாது. அனுசரணைப் பணிகளில் நோர்வே தவிர்ந்த வேறு ஸ்கன்டினேவிய நாடுகள் அல்லது சார்க் பிராந்திய நாடுகளின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு தடையாக இருக்கப் போவதில்லை.

சார்க் பிராந்திய நாடுகளே இந்த அனுசரணைப் பணிகளுக்கு பெருத்தமான நாடுகளாக அமையும். எவ்வாறாயினும் இந்தியாவை அனுசரணைப் பணிகளில் இணைத்துக் கொள்வது சாத்தியமற்றது என்று கருதுவதாகவும் ஹெல உறுமய குறிப்பிட்டுள்ளது.

(01)

## ஐ.தே.க எம்பிக்கள் நால்வர் ஆளும்கட்சியில் இணைய முயற்சி!

கொழும்பு—

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வர் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளவுள்ளதாகவும்,இது தொடர்பாக அரசதரப்பு முக்கியஸ்தர்களுடன் இரகசியப் பேச்சுக்களில் இறங்கியுள்ளதாகவும் தெரியவருகின்றது. கொழும்பு, இரத்தினபுரி, அம் பாறை, புத்தளம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களே இவ்வாறான இரகசியப் பேச்சுக்களை நடத்திவருவதாகத் தெரியவருகிறது.


இவர்கள் வெகு விரைவிலேயே ஆளும் கட்சிப்பக்கம் சாயலாம் எனத் தெரியவருகின்றது. ஆளும் கட்சிக்குள் உள்வாங்குவது தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இறுதியான முடிவு எதனையும் மேற்கொள்ளவில்லை என்று ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை ஆளும் கட்சிக்குள் கொண்டுவருவதற்கு ஆளும் கட்சியின் மூத்த உறுப்பினர்களின் இணக்கத்தையும், ஆலோசனையையும் பெறுவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை, ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வரும் எதிர்வரும் 7ஆம் திகதி கட்சி தாவவுள்ளதாக இன்னொரு தகவல் தெரிவித்தது. (01)




வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்கள் மற்றும் மாணவர்களுக்கு அன்பளிப்புப் பொருட்கள் மற்றும் கற்றல் உபகரணங்களை றீடோ நிறுவனத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் ஜெயக்குமார் வழங்குவதைப் படத்தில் காணலாம்.



# இங்கிலாந்துக்கு இனிங்ஸ் தோல்வி தொடரை கைப்பற்றியது பாகிஸ்தான்

லாகூர் —

லாகூரில் நடைபெற்றுவந்த கடைசி டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணியை இனிங்ஸ் மற்றும் 100 ஓட்டங்களால் பாகிஸ்தான் அணி படுதோல்வியடையச் செய்தது.

முதல் இனிங்ஸில் இங்கிலாந்து அணி பெற்ற 288 ஓட்டங்களுக்கு பதிலளித்தாடிய பாகிஸ்தான் அணி முதல் இனிங்ஸில் 636 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை டிக்ளேர் செய்தது. இதையடுத்து நேற்றுமுன்தினம் 348 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இனிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதற்காக பெரும் நெருக்கடியுடன் களமிறங்கிய இங்கிலாந்து அணி 2ஆவது இனிங்ஸில் ஆடத்தொடங்கியது.


4ஆம் நாள் ஆட்டநேரமுடிவில் 2 விக்கெட் இழப்புக்கு 121 ஓட்டங்களைப் பெற்றிருந்த இங்கிலாந்து அணி நேற்று தொடர்ந்து ஆடியது.



பெல் - கொலிங்வூட் ஜோடி நிதானமாக நின்றுபிடித்ததால் ஸ்கோர் 200ஐத் தாண்டியது.


ஸ்கோர் 205ஆக இருந்தபோது 12 பவுண்டரிகளுடன் 80 ஓட்டங்களைப் பெற்றிருந்த கொலிங்வூட் கனேரியாவின் பந்துவீச்சில் ஆட்டமிழக்க இங்கிலாந்து தடுமாறியது.

ஸ்கோர் 212ஆக இருந்தபோது 1 ஓட்டத்துடன் இருந்த பீற்றர்சன் மற்றும் ஓட்டமெதையும் பெறாமலிருந்த பிளின்ரொப்பையும் கனேரியா வீழ்த்தினார். அதே ஸ்கோரில் 92 ஓட்டங்களுடன் ஆடிக்கொண்டிருந்த பெல், அக்தரின் பந்தில் எல்.பி.டபிள்யூ



முறையில் ஆட்டமிழந்தார்.

இதன்பின் ஜோன்ஸ் 5, பிளங்கெற் 0, ஹொகாட் 0, உடல் 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க 77.1 ஓவரில் இங்கிலாந்து அணி 248 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தது. இதனால் இனிங்ஸ் மற்றும் 100 ஓட்டங்களால் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றது.



பந்துவீச்சில் கலக்கிய அக்தர் 5 விக்கெட்டுக்களையும், கனேரியா 4 விக்கெட்டுக்களையும், சமி 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.



இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரை 2:0 என்ற அடிப்படையில் பாகிஸ்தான் அணி கைப்பற்றி வெற்றிவாகை சூடியது.

இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக இரட்டைச் சதமடித்த மொகமட் யூசுப் தெரிவானார்.

## விளையாட்டு

# இந்திய - இலங்கை டெஸ்ட் போட்டி இரண்டாவது நாளாகவும் நிறுத்தம்





சென்னை —

இந்திய - இலங்கை அணிகளுக்கிடையில் சென்னை - சேப்பாக்கம் மைதானத்தில் இடம்பெறவிருந்த முதலாவது டெஸ்டின் இரண்டாம் நாள் ஆட்டமும் பலத்த மழையால் ரத்துச் செய்யப்பட்டது.

வங்கக் கடலில் மையம் கொண்டிருந்த புயலால் சென்னையில் கடந்த வியாழன் முதல் பலத்த மழை பெய்தது. இதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு தொடங்கிய மழை தொடர்ந்து பெய்தது. இதனால் முதல் நாள் ஆட்டம் ரத்துச் செய்யப்பட்டது.

இதனால் 2ஆவது நாள் ஆட்டம் அரைமணி நேரத்திற்கு முன்பாக 9 மணிக்கு தொடங்குமென அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில் நேற்று முன்தினமிரவு இடி, மின்னலுடன் கனத்த மழை பெய்தது. இதன் காரணமாக சேப்பாக்கம் மைதானமே வெள்ளக்காடாக மாறியுள்ளது. 80 சதவீதம் மைதானம் மூடப்பட்டாலும், வெளிப்பக்கம் தண்ணீர் நிரம்பியுள்ளது.

இரண்டு நாள் மழை நீடிக்குமென்று அறிவிக்கப்பட்ட போதிலும், சென்னையில் நேற்றுக்காலை வானம் வெளிக்கத் தொடங்கியது. 9 மணிக்கெல்லாம் சற்று வெயில் அடித்தது. இதனால் மைதானத்தில் தேங்கி நிற்கும் தண்ணீரை வெளியேற்றும் பணி நடந்தது.

8.30 மணியளவில் நடுவர்கள் மைதானத்தைப் பார்வையிட்டனர். பின்னர் அவர்கள் நேற்றைய ஆட்டம் நடத்த வாய்ப்பில்லையெனக் கூறினார்கள்.

நேற்றைய ஆட்டம் நடைபெறுமா இல்லையா என்பது குறித்து மீண்டும் 12.30 மணிக்கு மைதானத்தை ஆய்வு செய்த பின்பு அறிவிக்கப்படுமென்று கூறினர். அதன்பின்பு நடுவர்கள் 12.30 மணிக்கு மைதானத்தை ஆய்வு செய்தனர். அதன்பின்பு 2ஆவது நாள் ஆட்டமும் ரத்துச் செய்யப்படுவதாக அறிவித்தனர்.

### ஆஷஸ் டெஸ்ட் தொடர் போல

# இந்திய - பாகிஸ்தான் அணிகளிடையேயும் புதிய தொடரை நடத்த பாகிஸ்தான் விருப்பம்

லாகூர் —

அவுஸ்ரேலிய - இங்கிலாந்து அணிகளிடையே பாரம்பரியமான ஆஷஸ் டெஸ்ட் போட்டித் தொடர் நடைபெற்று வருகிறது. 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட இந்தத் தொடர் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இரு நாடுகளிலும் மாறிமாறி நடைபெறும்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு இங்கிலாந்தில் நடைபெற்ற இந்தத் தொடரில் அவுஸ்ரேலியாவை 2-1 என்ற கணக்கில் வீழ்த்தி இங்கிலாந்து சம்பியன் ஆனது. இதன் மூலம் 18 ஆண்டுகளுக்குப் பின்பு இந்தத் தொடரை வென்று சாதனை படைத்தது. அடுத்த ஆஷஸ் தொடர் அவுஸ்ரேலியாவில் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் ஆஷஸ் டெஸ்ட் தொடரைப் போல இந்திய - பாகிஸ்தான் அணிகளிடையே இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை புதிய கிரிக்கெட் தொடரை நடத்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விருப்பம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அந்த நாட்டு கிரிக்கெட் சபைத் தலைவர் ஷகாரியார்கான் கூறியதாவது -

ஆஷஸ் டெஸ்ட் தொடர் மிகவும் சிறப்பு வாய்ந்தது. அதேபோல இந்திய - பாகிஸ்தான் அணிகளிடையே 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை புதிய கிரிக்கெட் தொடரை நடத்த விரும்புகிறோமெனத் தெரிவித்தார்.



# 147 ஓட்டங்களால் நியூஸிலாந்தை அவுஸ்ரேலிய அணி தோற்கடித்தது

ஒக்லண்ட் —

நியூஸிலாந்து அணிக்கெதிரான ஒருநாள் போட்டித் தொடரின் முதலாவது ஆட்டத்தில் 147 ஓட்டங்களால் அவுஸ்ரேலிய அணி அபாரமான வெற்றியைப் பெற்றது.

நேற்று நியூஸிலாந்தின் ஒக்லண்ட் நகரில் ஆரம்பமான போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணித் தலைவர் விற்றோரி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார்.

இதையடுத்து அவுஸ்ரேலிய அணியின் கில்கிறிஸ்ட் - கடிச் ஜோடி தொடக்க வீரர்களாகக் களமிறங்கியது. ஆனால், ஸ்கோர் 4ஆக இருக்கும் போது பிராங்ளின் வீசிய பந்தில் 3 ஓட்டங்களுடன் கில்கிறிஸ்ட் ஆட்டமிழந்தார்.

அடுத்து கடிச்சுடன் பொண்டிங் ஜோடி சேர ஆட்டம் சூடுபிடித்தது. கடிச் மெதுவாகவே ஓட்டங்களை எடுத்தாலும், பொண்டிங் பவுண்டரிகள், சிக்ஸர்கள் என அடித்து விரைவாக ஓட்டங்களை எடுக்கத் தொடங்கினார். ஸ்கோர் 121ஐ எட்டியபோது 2ஆவது விக்கெட்டாக கடிச்சை - ஸ்ரைரிஸ் வீழ்த்தினார். இவர் 65 பந்துகளில் 6 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 54 ஓட்டங்களை எடுத்தார்.

ஸ்கோர் 136ஆக இருந்தபோது கப்டன் விற்றோரி பொண்டிங்கின் விக்கெட்டை எல்.பி.டபிள்யூ முறையில் வீழ்த்தினார். இவர் 64 பந்துகளில் 5 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் 63 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து ஹொட்ஜுடன் சைமன்ஸ் இணைய ஸ்கோர் 148 ஐ எட்டியது. அப்போது 13 ஓட்டங்களுடன் ஆடிக்கொண்டிருந்த ஹொட்ஜை ஸ்ரைரிஸ் போல்டாக்கினார்.

அடுத்து சைமன்ஸுடன் கிளார்க் இணைந்தார். இருவரும் ஸ்கோரை 207 வரை உயர்த்தினர். இந்தநிலையில் 5ஆவது விக்கெட்டாக சைமன்ஸை விற்றோரி வீழ்த்தினார். சைமன்ஸ்



59 பந்துகளில் 44 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து கிளார்க்குடன் ஹூசே ஜோடி சேர ஸ்கோர் 230 ஐ எட்டியது. அப்போது கிளார்க் 31 ஓட்டங்களுடன் கெய்ன்ஸின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து கிளார்க்குக்கு பதிலாகக் களமிறங்கிய லீயும் ஓட்டமெதையும் பெறாமல் கெய்ன்ஸின் பந்தில் ஆட்டமிழக்க - ஹொக் களமிறக்கப்பட்டார். ஆனால் அவரும் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

50 ஓவர்கள் நிறைவில் அவுஸ்ரேலிய அணி 8 விக்கெட் இழப்புக்கு 252 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஹூசே ஆட்டமிழக்காது 21 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

பந்துவீச்சில் கெய்ன்ஸ், ஸ்ரைரிஸ், விற்றோரி தலா 2, மில்ஸ், பிராங்ளின் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

அடுத்து 253 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய நியூஸிலாந்து அணி தொடக்கத்திலேயே தடுமாறத் தொடங்கியது. முன்னணி ஆட்டக்காரர்கள் 6 பேர் 33 ஓட்டங்களை எடுப்பதற்குள் ஆட்டமிழந்தனர்.



வின்சென்ட் 4, அஸ்ரில் 14, எச். மார்ஷல் 5, ஸ்ரைரிஸ் 1, ஜே.மார்ஷல் 1, மக்மிலன் 0 ஓட்டங்களுடன் வெளியேற கெய்ன்ஸ், ஒரம் ஜோடி இணைந்து சற்று நேரம் நின்று பிடித்தது. இதனால் ஸ்கோர் ஒருவாறு 74ஐ எட்டியது.

இந்த நிலையில் 23 ஓட்டங்களுடன் இருந்த ஒரத்தை கிளார்க் போல்டாக்க நியூஸிலாந்து அணி மீண்டும் ஆட்டம் கண்டது.

மக்கலம் 2, விற்றோரி 8, பிராங்ளின் 0 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்ப 105 ஓட்டங்களுடன் நியூஸிலாந்து அணி சுருண்டு படுத்தது.

கடைசிவரை கெய்ன்ஸ் 35 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தார்.

பந்துவீச்சில் லீ 3, கிளார்க் 3, பிராக்கன் 2, சைமன்ஸ் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

# பாகிஸ்தான் ஹொக்கி கப்டனுக்கு 3 போட்டிகளில் விளையாட தடை!

சென்னை —

பாகிஸ்தான் ஹொக்கி அணியின் கப்டன் மொகமட் சக்லைன். சமீபத்தில் ஹம்பர்க் நகரில் மாஸ்டர்ஸ் சம்பியன்ஷிப் ஹொக்கி போட்டி நடைபெற்றது. இதில் அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான ஒரு ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி மோதியது.

அப்போது ஒரு கட்டத்தில் அவுஸ்ரேலிய வீரர் கிரேக் விக்டரிக்கும், சக்லைனுக்குமிடையே மோதல் ஏற்பட்டது. இதில் விக்டரியின் தாடையில் பலத்த அடிபட்டது.

இது குறித்து சர்வதேச ஹொக்கி சம்மேளனம் விசாரணை நடத்தியது. இதன் மூலம் சக்லைன் வேண்டுமென்று முரட்டுத்தனமாக நடந்து கொண்டார் என்பது தெரியவந்தது. விக்டரிக்கு காயம் ஏற்படுத்தியதற்காக சக்லைனுக்கு 3 போட்டிகளில் விளையாடத் தடை விதிக்கப்படுகிறதென அறிவித்துள்ளது.

இதனால் சென்னையில் எதிர்வரும் 10ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை நடைபெறும் 6 நாடுகளிடையேயான சம்பியன் கிண்ண ஹொக்கி போட்டியின் முதல் மூன்று ஆட்டங்களில் சக்லைன் விளையாடமுடியாது.

அவர் ஹொலன்ட், அவுஸ்ரேலிய, ஸ்பெயின் ஆகிய அணிகளுக்கு எதிரான ஆட்டத்தில் விளையாடமாட்டார்.

ஆனால், இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் பங்கேற்பார். சக்லைனுக்கு எதிரான தடை பாகிஸ்தானில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலைக்கு சைக்கிளில் செல்ல படையினர் தடைவிதிப்பு!

உடுவில் —

தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலைக்குச் சைக்கிளில் செல்லும் நோயாளர், நேரடியாக சைக்கிளில் செல்வது கடந்த திங்கட்கிழமை முதல் படையினரால் தடை செய்யப் பட்டுள்ளது.

சோதனைச் சாவடிக்கு அண்மையிலுள்ள ஒரு காணிக்குள் தமது சைக்கிள்களை நிறுத்தி விட்டு, உடற்சோதனை முடித்து பாஸ் பெற்று, பஸ்ஸில் ஏறி செல்லுமாறு படையினர் தெரிவிக்கின்றனர். இதனால், வெளிநோயாளர் கிளினிக் செல்வோர் நீண்ட நேரத்தை செலவிட வேண்டியிருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

வைத்தியசாலை உயர்பாதுகாப்பு வலயத்தில் மீண்டும் செயற்பட ஆரம்பித்த தினம் முதல் எவ்வித சிரமமுமின்றி சென்று வந்த நோயாளர், கடந்த வாரம் முதல் சைக்கிளில் செல்ல அனுமதி மறுத்துள்ளனர். இது பற்றி அங்குள்ள படையினரிடம் கேட்டபோது தலைமை அதிகாரியின் கட்டளை என தெரிவிக்கின்றனர்.

வைத்தியசாலை கடந்த ஆகஸ்ட் மாதம் வடக்கு கிழக்கு ஆளுநரால் திறந்து வைக்கப் பட்டது. அப்போது அங்கு வருகை தந்திருந்த யாழ் மாவட்ட இராணுவத்தளபதி நோயாளர்கள் சோதனைகள் இன்றி இலகுவாகச் சென்று வரக்கூடியவாறு புதிய பாதையொன்று திறந்து விடப்படுமெனத் தெரிவித்தார். ஆனால், இன்று வரை புதிய பாதை திறக்கப்படவில்லை. வைத்தியசாலையின் விடுதி கட்டிட பணிகளின் ஈடுபடும் தொழிலாளருக்கு மாதாந்தம் வழங்கப்படும் பாஸ் வழங்கப்படவில்ல.

இதனால் கட்டிட நிர்மாணப் பணிகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன. எதிர்வரும் ஜனவரி முதல் முழுமையாக வைத்தியசாலை தனது சொந்தக் கட்டிடத்தில் செயற்படுமென எதிர்பார்க்கப் பட்டது. ஆனால், கட்டிட வேலைகள் தாமதமடைந்துள்ளதால் இது சற்று தாமதமாகலாம் எனக் கூறப்படுகிறது.

கூட்டுறவு வைத்தியசாலைக் கட்டிடத்தில் இயங்கிய பொழுது நாளாந்தம் 300 - 400 நோயாளர் சிகிச்சை பெற்று வந்தனர். தற்பொழுது நாளாந்தம் 75 - 90 நோயாளர்களே சிகிச்சைக்குச் செல்வதை வைத்தியசாலை பதிவேட்டிலிருந்து அறியமுடிகிறது.

விரைவாக சிரமமின்றி சென்று வரக்கூடியவாறு ஒழுங்குகளைச் செய்து தருமாறு நோயாளர்கள் சம்பந்தப்பட்டவர்களை கோரியுள்ளனர். (101)

# அபிவிருத்தி செய்யப்பட்டுவரும் யாழ்.வலய முகாமைத்துவ பிரிவு

யாழ்ப்பாணம் —

ஜப்பான் செயல்திட்ட நிறுவனமான ஜெய்கா நிறுவனத்தினால் யாழ்.கல்வி வலய முகாமைத்துவ பிரிவு அபிவிருத்தி செய்யப்பட்டுவருகிறது.

இச்செயற்திட்டத்தில் யாழ். வலயக் கல்வித் திணைக்கள அலுவலக முகாமைத்துவ விருத்தி, பாடசாலை நிர்வாக முகாமைத்துவவிருத்தி, பாடசாலையில் கணித, விஞ்ஞான, ஆங்கில விருத்தி ஆகிய மூன்று வகையான செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வேலைத்திட்டங்கள் ஜப்பான் பல்கலைக்கழக பேராசிரியர்களான சுகாசி நாகாய், மசாரூ - ரூது ஆகியோரின் ஆலோசனையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திரு.செல்வரத்தினம் தெரிவித்தார்.

# நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட 4 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன

சுதுமலை —

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள நான்கு வீதிகள் சபையின் நிதி மூலமாகப் புனரமைக்கப்படவுள்ளதாக பிரதேச சபைச் செயலாளர் பொ.வைரமுத்து தெரிவித்தார்.

இதேவேளை, பிரதேச சபைக்குட்பட்ட பல அபிவிருத்தி வேலைகள் 25 இலட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கொக்குவில் கிழக்கு கோணாவளை வைரவர் வீதி, கோண்டாவில் வன்னிய சிங்கம் வீதி, கொக்குவில் பிரம்படி குறுக்கு வீதி ஆகிய வீதிகளே புனரமைக்கப்படவுள்ளன.

கொக்குவில் நவீன சந்தைக்கான சுற்றுமதில் அமைத்தல், திருநெல்வேலி தொழிலாளர் குடியேற்றத் திட்டத்தில் நீர்த்தாங்கி அமைத்தல் என பல்வேறு அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு வேலைகளும் இடம்பெறவுள்ளதாக பிரதேச சபைச் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (91)

# தூவல் நீர்ப்பாசன முறையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை!

யாழ்ப்பாணம் —

தூவல் நீர்ப்பாசன விவசாய முறையை மேம்படுத்துமுகமாக குடாநாட்டில் உள்ள 94 விவசாயிகளுக்கு தூவல் நீர்ப்பாசன முறையை எதிர்வரும் ஆண்டின் ஜனவரி மாதத்துக்கிடையில் கமநல சேவைத்திணைக்களத்தினர் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட உதவியுடன் மானிய அடிப்படையில் அறிமுகப்படுத்தவுள்ளனர்.

இதனடிப்படையில் உடுவில் தெல்லிப்பளை, புத்தூர், உரும்பிராய், நல்லூர், கீரிமலை, சாவகச்சேரி, கைதடி, வேலணை, மருதங்கேணி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளுக்கே இத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

தூவல் நீர்ப்பாசனத்தை மேற்கொள்வதற்கான செலவுகளில் ஐம்பது வீதத்தை மானியமாகவும், மிகுதிப் பணமானது விவசாயிகளிடமிருந்து பகுதி பகுதியாக அறவிடப்படவுள்ளதாகவும் கமநல சேவை நிலையத்தின் உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

மேலும் தூவல் நீர்ப்பாசனத்தை ஊக்குவிக்குமுகமாக கடந்த நாட்களிலும் கமநல சேவைத் திணைக்களம் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்துடன் இணைந்து 86 விவசாயிகளுக்கு தூவல் நீர்ப்பாசன முறையை முதற்கட்டமாக அறிமுகப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (90)

# அருணலு கணக்கு வைத்திருப்போர் கௌரவிக்கப்படவுள்ளனர்

யாழ்ப்பாணம் —

கொமர்ஷல் வங்கியில் அருணலு சிறுவர் சேமிப்பு கணக்கு வைத்துள்ள சிறுவர்களுள் கடந்த வருடம் நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து, பாடசாலை மட்டத்தில் 1,2,3 ஆம் இடங்களை பெற்றவர்களுக்கு இன்று யாழ்.கொமர்ஷல் வங்கிக்கிளையில் வைத்து பரிசில்கள் வழங்கப்பட இருப்பதாக வங்கிவட்டாரங்கள் அறிவித்துள்ளது.

# வீதியோரத்தில் உலர விடப்படும் வலைகளால் மக்களுக்கு சிரமம்

யாழ்ப்பாணம் —

கொழும்புத்துறை சாமியார் வீதியில் கடற்தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் தமது தொழிலுக்கு பயன்பத்தாத வலைகளை அவ்வீதியில் உலர விடுவதனால், போக்குவரத்தை மேற்கொள்ளும் மக்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

அண்மையில் மேற்படி வீதியில் நடந்து சென்ற குடும்பப் பெண் ஒருவர் வலையில் சிக்குண்டதில் காலில் காயம் ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அதே போல் மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் இதனால் தடம் புரள்கிறார்கள்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களிடம் எடுத்துக்கூறியும், எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று அப்பகுதி மக்கள் விசனமடைந்துள்ளனர். (100)

# விநாயகர் சஷ்டி பூஜை

கொக்குவில் —

நாகேஸ்வரம், அளவெட்டி தெற்கு ஸ்ரீநாக வரத நாராயணர் ஆலயத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை விநாயகர் சஷ்டி விரத பூசை பக்தி பூர்வமாக நிறைவு செய்யப்படும்.

கடந்த ஒருமாத காலம்வரை நடைபெற்று வந்த பிள்ளையார் கதைபடிப்பு நிறைவு தினமான அன்றைய தினம், விநாயகப் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும், பூஜைகளும் நடைபெற இருக்கின்றன. (206)

# வீதிகள் புனரமைப்பு

உடுவில் —

வலி.தெற்கு பிரதேச சபையின் நிதியிலிருந்து சுன்னாகம் தில்லைகட்டி வீதி, செல்லத்துரை வீதி, ஏழாலை கேசாவத்தை நாச்சியப்புலம் வீதி, இணுவில் சின்னத்தம்பிப் புலவர் வீதி, தாவடி ஆரம்ப சுகாதார நிலைய வீதி ஆகிய வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. இவ்வேலைகள் யாவும் இவ் வருட இறுதிக்குள் முடிவடையும்.

அத்துடன் உடுவில் உப அலுவலகத்திலுள்ள பொது நூலகத்திற்கான விஸ்தரிப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதில் அரைவாசி வேலைகள் முடிவடைந்துள்ளன. மிகுதி வேலைகள் யாவும் அடுத்தாண்டு நடுப்பகுதிக்குள் முடிவடையுமென பிரதேச சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (101)

# நீண்டகாலம் பணியாற்றிய அலுவலர்கள் கௌரவிப்பு

சுதுமலை —

வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையில் தொடர்ச்சியாக சேவையாற்றிய 10 அலுவலர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

பிரதேச சபையில் 15 வருடங்களுக்கு மேல் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளில் பணியாற்றியவர்களுக்கே சான்றிதழுடன் நினைவுப் பரிசும் வழங்கிக் கௌரவிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மாதம் 14ம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ள உள்ளூராட்சி வார இறுதி நிகழ்விலே கௌரவிப்பு இடம்பெறவுள்ளதாக பிரதேச சபை செயலாளர் மே.சாந்தசீலன் தெரிவித்தார்.

மேற்படி அலுவலகர்கள், ஊழியர்களுக்கான கௌரவ சான்றிதழை யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா வழங்கி கௌரவிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (91)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : வி.அபிசாத்
முகவரி : அளவெட்டி

# ஆறுகால் மடத்தில் கடத்தப்பட்ட 2 இளைஞர் தாக்கப்பட்டு பின் விடுதலை செய்யப்பட்டனர்

சுதுமலை —

ஆறுகால் மடம் மயிலுவீதியைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத இளைஞர் குழுவால் கடத்திச் செல்லப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டபின் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த வியாழக்கிழமை 6.45 மணியளவில் ஆறுகால் மடத்தில் நின்ற இருவரையும் 10க்கும் மேற்பட்டோர் மோட்டார் சைக்கிளில் கடத்திச் சென்றுள்ளனர்.

கடத்தப்பட்ட இரண்டு இளைஞர்களையும் யாழ் இராமநாதன் வீதியிலுள்ள ஆட்களற்ற வீட்டில் வைத்து பொல்லுகள் கொண்டு தாக்கியதுடன், அவர்களிடமிருந்து கைத்தொலைபேசி, அடையாள அட்டை, பணம் (10ஆயிரத்து 200ரூபா ) என்பவற்றையும் அபகரித்துள்ளனர்.

பேரின்பநாதன் சுதாகரன் (வயது 25) மன்மதராசா றொசாந்தன் (வயது 20) ஆகிய இருவருமே தாக்கப்பட்டதாகவும் இது தொடர்பாக யாழ். மனித உரிமை ஆணைக்குழுவிலும், யாழ்.பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

கண்களைக் கட்டி இருவரையும் தாக்கியதாகவும், பின்னர் 9 மணியளவில் தம்மை வீதியில் இறக்கி விட்டுச் சென்றதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (91)

# பண்ணை கால்நடை வைத்தியஅதிகாரி அலுவலகத்திற்கு புதிய கட்டடம் அமைப்பு!

சுதுமலை —

நிகொட் நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் பண்ணைப் பகுதியில் கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கென புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

பண்ணைப் பகுதியில் யாழ். மாவட்ட கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம் முன்னர் இயங்கிய இடத்திலேயே இந்தப் புதிய கட்டடமும் நிர்மாணிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிகொட் வேலைத்திட்டத்தின் கீழ் 80 லட்சம் ரூபா செலவில் முன்னெடுக்கப்படவுள்ள புதிய கட்டடப் பணிகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கடந்தகால இராணுவ நடவடிக்கைகள் காரணமாக முன்பிருந்த அலுவலகம் முழுமையாகச் சேதமடைந்ததாகவும், இதனாலேயே புதிய அலுவலகம் அமைக்கப்படவுள்ளதாகவும் யாழ்.மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள வைத்திய பொறுப்பதிகாரி பொ.இராமநாதன் தெரிவித்துள்ளார். (91)

# சத்துணவு வழங்கத் திட்டம்

உடுவில் —

வலி.தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட முன்பள்ளிகளுக்கான சத்துணவு வழங்கும் திட்டம் திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுவரை சத்துணவுப் பொதிகளைப் பெற்றுக் கொள்ளாத முன்பள்ளிகளின் ஆசிரியர்கள், மாணவர்களின் பெயர் விபரங்களுடன் வருகை தந்து உள்ளூராட்சி உதவி உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (101)

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ------

முகவரி ------

பிறந்த ஆண்டு: ------



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------
பெற்றோர் ஒப்பம்

# மதுபானசாலையை அகற்றக் கோரிக்கை

பருத்தித்துறை —

பருத்தித்துறை சிவன் கோயிலுக்கு அருகில் இயங்கிவரும் மதுபானசாலையை அகற்றுமாறு அந்தப்பிரதேச மக்கள் பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

புனித தலமான இவ்வாலயத்திற்கு அருகில் நீண்டகாலமாக இயங்கிவரும் இந்த மதுபானசாலையால், ஆலயத்திற்கு வரும் பொதுமக்களும், வீதியால் செல்பவர்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இரவு வேளைகளிலும் இவ்வாலய பின் வீதியில் அமைந்துள்ள இந்த மதுபானசாலையால், கலாசார சீர்கேடுகளும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (14)




ஜோசப் கிருஷ்ணாவின்

# மயிலிறகாய் வருடும் மன்னர்கள்


சச்சின் டெண்டுல்கர் கணிப்பதற்கு கருவி இருக்குமா?

அவுஸ்ரேலிய அடிலெய்ட் ஓவலில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டியில் - டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்ட எண்ணிக்கைச் சாதனையை தன்னகத்தே வைத்திருந்த அலன் போடரின் 11174 ஓட்ட எண்ணிக்கையைத் தாண்டி மேற்கிந்தியத் தீவுகளின் பிறைன் லாறா சாதனை படைத்தார். இது பற்றி பாகிஸ்தான் அணிப் பயிற்றுநர் பொப் வூல்மர் திருப்தி தெரிவித்துள்ளார். இப்படி ஒரு சாதனை புரிவார் என்று நான் முன்பே எண்ணியிருந்தேன் என்கிறார் அவர். இவரது கணக்கில் பலநூறுகள், ஐந்து இரட்டைச்சதங்கள், ஒரு 375, ஒரு 400 அத்தோடு வோரிக்ஷயர் கவுண்ரிக்காக 501. இப்படியாக எல்லா இலக்கங்களிலும் கைவைத்தவர் பிறைன் லாறா. பொப் வூல்மர், வோரிக்ஷயர் அணித்தலைவராக இருந்த போது பிறைன் லாறா இந்த அணிக்காக விளையாடியவர். இவர் காலத்தில் வோரிக்ஷயர் சம்பியன் பட்டம் வென்றமைக்கு முக்கிய காரணமே பிறைன் லாறா தான் என்கிறார் பொப் வூல்மர்.

அண்மைக்கால கிரிக்கெட் பருவங்கள் லாறாவுக்குச் சாதகமாக இருக்கவில்லை. இலங்கைக்கான மேற்கிந்தியத் தீவுகளின் வருகையின் போது விளம்பர ஒப்பந்தத் தகராறுகளால் லாறா இலங்கைக்கு வரவில்லை. இதுவும் இவருக்கு ஒரு இழப்புத்தான். இதன் பின் நடைபெற்ற சுப்பசீரிஸ் போட்டிகளில் மூன்று ஒருநாள் போட்டிகளிலும் பெற்ற ஓட்ட எண்ணிக்கை ஐந்து மட்டுமே. சுப்பசீரிஸ் டெஸ்டில் பெற்றது 5 உம், 36 உம் மட்டுமே.

அதன் பின் இப்போது நடைபெற்ற சுற்றுப்போட்டித் தொடரில் முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் சொற்ப ஓட்டங்களே லாறா பெற்றார். இப்படி லாறாவும், அவரது ரசிகர்களும் தொய்ந்து போயிருந்த நிலையில்தான், மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இரட்டைச்சதம் போட்டு அதனோடிணைந்து அலன் போடரின் சாதனையையும் முறியடித்திருக்கிறார்.

பல சாதனைகளுக்குரியவராக இருக்கும் லாறா, தற்போது 31 சதங்கள் போட்டிருக்கிறார். கவாஸ்கரும், சச்சினும் 34 சதங்களுடன் சமப்பட்டு முன்னிலையில் நிற்கும் நிலையில், லாறா களத்திலுள்ள சச்சினை துரத்திப் பிடிப்பார் என்பதே எல்லோரதும் கணிப்பு. ஆனால் லாறா அதைப்பற்றிப் பேசுவதாக இல்லை. எனது இலட்சியம் 2007 உலகக்கிண்ணப் போட்டிகளில் விளையாடுவதுதான் என்கிறார். பொப் வூல்மர் தன் விருப்பத்துக்குரிய வீரர்பற்றி சிறிது மிகையாகக் கூறுகிறாரோ தெரியவில்லை. லாறாவின் தகுதி நிலையில் இன்னும் ஆறு வருடங்கள் அதாவது 42 வயது வரை சர்வதேச கிரிக்கெட் விளையாடுவார் அவர் என்கிறார் வூல்மர்.


பிறைன் லாறா டிஜிட்டல் மனிதன்

இது ஒருபுறம். மறுபுறம் சச்சின், வசீம் அக்ரத்தின் சாதனை ஒன்றை முறியடித்து இன்னொரு பதிவை ஏற்படுத்தியிருக்கிறார். 356 ஒருநாள் போட்டிகளில் விளையாடிய பாகிஸ்தானின் வசீம் அக்ரம்தான் ஒருநாள் போட்டிகளில் அதிகூடிய எண்ணிக்கையைக் காட்டி நிற்பவர். தற்போது சச்சின் தென்னாபிரிக்காவுக்கு எதிரான நான்காவது ஒருநாள் போட்டியில் அந்தச் சாதனையை முறியடித்து விட்டார். இதனைப் பற்றிக் குறிப்பிடும் வசீம் அக்ரம் - சச்சினை மனமாரப் பாராட்டுகிறார். அவர் உள்ள துடுப்பாட்ட சாதனைகள் எல்லாவற்றையும் உடைத்தெறிவார் என்கிறார் வசீம். சச்சினைப் பற்றி குறைகள் கூறுவோரை என்னால் அங்கீகரிக்க முடியவில்லை. அவர் ஆறுமாத ஓய்வின் பின் மீண்டும் சிறப்பாக விளையாடுகின்றார். நான் பந்து வீச்சில் எதிர்கொண்ட சிரமமான துடுப்பாட்ட வீரர்களில் சச்சினே முதன்மையானவர். சவாலுக்குச் சவாலாக அவருக்குப் பந்துவீசுவது ஒரு அனுபவம் தான் என்று வியக்கிறார் வசீம்.

சச்சின் டெஸ்ட் ஓட்ட எண்ணிக்கையில் - லாறா (11204), அலன் போடர் (11174), ஸ்ரீவ்வோ (10927), இற்கு அடுத்து 10134 ஓட்டங்களுடன் நான்காம் இடத்தில் நிற்கிறார். (பாகிஸ்தான் தொடர் வரை) ஒருநாள் போட்டிகள் பொறுத்து 358 போட்டிகளில் 13909 ஓட்டங்கள், 38 சதங்கள் என்று நிறையவே சேர்த்து வைத்துள்ளார். இன்னொரு வீரர் சச்சினுடைய ஒருநாள் சாதனைக்கு கிட்ட வருவது மிகக்கஷ்டம். இதேபோன்ற நிலையை சச்சின் டெஸ்ட் போட்டிகளிலும் ஏற்படுத்துவார் என்று நம்பலாம்.

லிவிங்ஸ்ரனின்

# இவன் உலகம் வேறு


டனிஸ் கனேரியா பித்தா பிறைசூடி பெருமானே....

இன்சமாம் உல் ஹக். இவரது கிரிக்கெட் வாழ்க்கையில் இது இரண்டாவது வசந்தம். பங்களாதேஷ் அணிக்கு எதிராக இரண்டு வருடங்களுக்கு முன் மிக மோசமாக விளையாடிய போது "இனிப் போதும்" என்று தீர்மானித்தார். ஆனால் சயீட் அன்வரின் ஆலோசனையை ஏற்க, அடுத்து வந்த டெஸ்ட் போட்டியில் 138 மற்றும் 98 ஓட்டங்களைப் பெற்றார். அதன் பின் அணித்தலைமை பெற்றதும் பாகிஸ்தானின் பெருமையை நிலைநாட்டிக்கொண்டு வருவதுமே இவரது இரண்டாவது வசந்தம். இந்த வசந்தத்தின் ஒரு கட்டம் தான் ஆஷஸ் புகழ் இங்கிலாந்தை முதலாவது டெஸ்ட் போட்டியில், ஊகங்கள் எல்லாவற்றையும் கடந்து மண் கவ்வ வைத்தது. அதன் பின் இரண்டாவது டெஸ்டிலும் கூட இங்கிலாந்துக்குப் பெரும் நெருக்கடி கொடுத்தது. எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பாக இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இரு இனிங்ஸ்களிலும் செஞ்சரி போட்டு சாதனைபடைத்திருப்பது. அதோடு இந்த 35 வயது நாயகன் தனது 24 ஆவது செஞ்சரியைப் போட்டு பாகிஸ்தான் வீரர்களில் அதிகூடிய டெஸ்ட் செஞ்சரி பெற்ற வீரர் என்ற முதன்மையையும் பெற்றுக்கொள்கின்றார்.

எல்லோருக்கும் தலைமைப்பதவி மாபெரும் அழுத்தம். விவியன் ரிச்சட்ஸ், சச்சின் டெண்டுல்கர், பிறைன் லாறா என்று உதாரணங்கள் காட்டலாம். ஆனால் இன்சமாமுக்கு எல்லாமே ஒன்றுதான். இவர் அணித்தலைவராகி விளையாடிய 16 டெஸ்ட் போட்டிகளில் இவரது துடுப்பாட்டச் சராசரி 55 ஓட்டங்களுக்கு மேல். இறுதியாக விளையாடிய 8 இனிங்ஸ்களில் 4 செஞ்சரிகள் போட்டுள்ளார். மகத்தான துடுப்பாட்ட வீரர்தான் இவர். நான் நிறைந்த இறை நம்பிக்கையுடையவன். இறைவனே எனக்கு வெற்றிகளைத் தருகிறான் என்பவர் மீது ஒரு குற்றச்சாட்டு எழுகிறது. அது ஏனையோர் மீது தனது மத நம்பிக்கையை திணிப்பது என்ற சாயலில் செல்கிறது. யூசுப் யொகானா என்ற கத்தோலிக்கர் மொகமட் யூசுப் என்ற பெயர் மாற்றத்துடன் மதம் மாறியமை பற்றியும் எடுத்துக்காட்டப்படுகிறது. இந்த விடயத்தில் இன்சமாம் நேரடியாகக் குற்றம் சாட்டப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.


இன்சமாம் உல் ஹக் சலனமில்லாச் சரித்திரம்

இதேவேளை மொகமட் யூசுப் அல்லது யூசுப் யொகானா மதம் மாறியது தொடர்பில், இவர் இஸ்லாத்தை உண்மையாக நேசித்து உணர்ந்து மதம் மாறவில்லை. பாகிஸ்தான் அணித்தலைவர் பதவியை மனதில் வைத்தே மதம் மாறினார் என்று வாங்கு வாங்கென்று வாங்கியிருந்தன பாகிஸ்தான் பத்திரிகைகள்.

இது ஒருபுறம் இருக்க இன்சமாம் தன்மீது விரல் சுட்டப்படுவதைத் தடுக்க ஒரு நியாயம் கூறுகிறார். அப்படியென்றால் பாகிஸ்தான் அணியின் ஒரேயொரு இந்துவான டனிஷ் கனேரியா இவ்வளவு சுதந்திரமாகவும், மகிழ்ச்சியாகவும் அணியில் இருக்கமுடியுமா? என்று கேட்கிறார். அவரது கேள்வியிலும் நியாயம் இல்லாமல் இல்லை.

எது எவ்வாறாயினும் விளையாட்டில் மதம் சார்ந்த சர்ச்சைகள் ஏற்படாமலிருந்தால் அது சிறப்பானது தான்.

நிர்மலனின்

# இவன் தான் மனிதன்

இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இலங்கை டெஸ்ட் அணியில் சனத் உபாதைகள். காயங்கள் காரணமாக இடம்பெறவில்லை என்று கூறப்பட்டபோதே. அது அப்பட்டமான பொய் என்பது எல்லோருக்கும் தெரிந்தே இருந்தது. இப்பொழுது சனத் சிறிய மௌனத்தின் பின் தானாகவே வாய்திறந்து பேசுகையில் - நீக்கத்துக்கான காரணத்தில் ஒரு சிறிய பகுதியை உபாதைகள் மீது பொறுப்பித்தாலும். இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் இவர் சிறப்புறச் செய்யவில்லை என்பதே பிரதானமான காரணமாக அமைந்தது என்பது தெரிய வருகிறது.


ராகுல் டிராவிட் மறைமுக எதிரி

இத்தனை வருடங்களாக இலங்கை கிரிக்கெட் அணியின் ஒரு அங்கத்தவராக எல்லா இடமும் சென்று வந்த எனக்கு இம்முறை இந்தியாவுக்கு விமானம் ஏறும் அணியில் நானில்லை என்ற உணர்வு மிகுந்த வேதனையாக இருந்தது என்கிறார். ஆனால். நான் விட்டுக்கொடுக்கப் போவதில்லை. என்னிடம் இன்னும் உயர்தரத்தில் கிரிக்கெட் ஆடும் திறமை இருக்கிறது என்பது எனக்கு நன்கு புரிகிறது. நான் உள்ளூர் சுற்றுப்போட்டிகளில் கூடுதல் கவனம் செலுத்தி. எனது தகுதி நிலையை உயர்த்திக்கொள்வேன். ஒரு தொழில் சார் கிரிக்கெட் வீரர் என்ற வகையில். ஏற்ற இறக்கங்களை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் எனக்கு இருக்கிறது.

இவரது ஆரம்ப கால கிரிக்கெட் ஏற்ற இறக்கங்களுடன்தான் ஆரம்பமாயிற்று. ஆனால் அவுஸ்ரேலியாவில் அடிலெய்ட் ஓவல் மைதானத்தில் இவர் போட்ட செஞ்சரியுடன் இவரது சகாப்தம் ஆரம்பமாகிறது. இதன் பின் இன்றுவரை இவர் திரும்பிப்பார்க்கவில்லை. ஆனால் இந்திய ஒருநாள் சுற்றுப்பயணம் இவரது கிரிக்கெட் வாழ்வில் மீண்டும் ஒரு கட்டத்தின் முடிவை காட்டி நின்றது.

சனத் மிக நம்பிக்கையுடன் "2007 உலகக்கிண்ணப் போட்டிகளில் நான் விளையாடுவேன்" என்று கூறுகிறார். எனது கிரிக்கெட் வாழ்க்கையை உலகக் கிண்ணப்போட்டிகளுடனேயே முடிக்க விரும்புகின்றேன் என்று கூறுகின்றார்.

எமது துரதிஷ்டமோ. இந்தியாவின் அதிஷ்டமோ இந்தியா தொட்டதெல்லாம் பொன்னாயிற்று. எமது முன்வரிசை ஆட்டக்காரர்கள் நான் உட்பட - சரியாகச் செய்யவில்லை. எனது ஆட்டத்தைப் பொறுத்த வரை தைரியமாகவே களமிறங்கினேன். ஆனால். நிலைக்க முடியவில்லை என்பதுதான் வேதனை என்கிறார்.

சனத் இந்திய அணிக்கு எதிராக டெஸ்ட் போட்டிகளில் நிறைய ரண்கள் குவித்தவர். ஏறத்தாழ 10 இனிங்ஸ்களில் ஆயிரம் ஓட்டங்களுக்கு மேல் குவித்தவர். இந்தியாவுக்கு எதிரான இவரது கணக்கு ஒரு செஞ்சரி. ஒரு 340 ஓட்டங்கள். ஒரு 199 என்று பதிவு இருக்கிறது. சராசரியும் 60 இற்கு மேல் இருக்கிறது. ஆனால் இம்முறை இந்தியாவுக்கு எதிராகச் சரிந்தார். அதுவே அணியிலிருந்து நீக்கவும் வழிகோலிவிட்டது.


சனத் ஜெயசூரிய இந்த மலர் வாடாது

எனினும் சனத்தின் திறமை என்ற வகையில். இன்னொரு பிரவேசம் அவருக்கு உண்டு என்பதை மறுப்பதற்கில்லை. அதோடு இந்திய அணியின் தகுதியின் உயர்வு இலங்கைக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளில் பிரகாசிக்கும் போது. சனத்தின் தேவையை இலங்கைத் தெரிவாளர்கள் உணர்வார்கள்.

விமலனின்

# தவறிச் செய்பவை தவறுகள் அல்ல

தவறுவிடும் நடுவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுப்பதில்லை. ஒரு அணியினர் செய்யும் தவறுகளுக்கு அவ்வணியின் தலைவரை மட்டும் தண்டித்தல், அறிமுகப்படுத்திய தொழில் நுட்பத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதில்லை... இப்படி சில விடயங்கள் ICC குறித்து வெளிவந்த, வெளிவந்து கொண்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள். இவற்றில் தவறுவிடும் நடுவர்களுக்கெதிராக எந்தவித நடவடிக்கையும் எடுப்பதில்லை என்பதற்கு பல உதாரணங்களை எடுத்துக்கூறலாம். இவ்வாறான சந்தர்ப்பங்கள் பெரும்பாலும் LBW தீர்ப்பிலும், CUGHT BEHIND சந்தர்ப்பங்களிலுமேயே அதிகம் ஏற்பட்டிருக்கின்றது. இந்தப் பத்திக்கு இந்த விடயம் தேவையில்லாததால் இத்துடன் நிற்க.


மல்கம் கிறே - ஈசான்மணி உணர்ந்தால் சரி

ஆனால் ஒரு அணியினர் செய்யும் தவறுகளுக்கு அணித்தலைவுரை மட்டும் குற்றவாளியாக்கி, தண்டனை பெற்றுத் தந்த இரண்டு சந்தர்ப்பங்களை கட்டாயம் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

ஒன்று இந்த வருடம் பாகிஸ்தான் அணி இந்தியாவுக்கு சுற்றுப்பயணத்தை மேற்கொண்ட பொழுது ஒருநாள் தொடரில் பந்து வீசுவதற்கு அதிக நேரம் எடுத்துக்கொண்டதற்காக, இந்திய அணியின் முன்னாள் தலைவர் சௌரவ் கங்கூலிக்கு ஆறு போட்டிக ளில் விளையாடத் தடை விதித்தது ICC.

அவ்வாறே தென்னாபிரிக்க அணி இவ் வருடம் மார்ச் மாதக் காலப்பகுதியில் மேற்கிந் தியத்தீவுகளுக்கு சுற்றுப்பயணத்தை மேற் கொண்ட பொழுதும், ஒருநாள் தொடரில் இந்த விவகாரம் தலையெடுத்தது. இதனால் தென்னாபிரிக்க அணித்தலைவர் சிமித்துக்கும் 4 ஒருநாள் போட்டிகளில் ஆடத் தடை விதிக்கப்பட்டது.

ICC யின் இந்தச் செயற்பாட்டுக்கு பலதரப்பில் இருந்தும் கண்டனக் கணைகள் வெளிவந்திருந்தன.(நமது விளையாட்டரங்கம் உட்பட) அதன் பிரதிபலிப்போ தெரியவில்லை. பின்னர் கங்கூலியின் 6 போட்டித்தடை 4 ஆக குறைக்கப்பட்டது.

இருப்பினும் அதன் பாதிப்புக்களில் இருந்தும், எதிர்ப்புணர்வில் இருந்தும் ICC மீளாமல் சட்டாம்பிள்ளைத் தனமாகவே இருந்த தென்றால், அதை மறுப்பதற்கு எவரும் இலர் எனலாம்.

ஆனாலும் யதார்த்தத்தை நோக்குமிடத்து ICC அந்தத் தவறிலிருந்து மீண்டெழுந்துவிட்டது என்றே தோன்றுகின்றது.


சௌரவ் கங்கூலி நட்டம் எனக்குத்தான்

இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையே முல்டானில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் பந்து வீசுவதற்கு அதிக நேரம் எடுத்துக்கொண்டதற்காக பாகிஸ்தான் வீரர்கள் அனைவருக்கும் ICC அபராதம் விதித்துள்ளது. அணித்தலைவர் என்ற வகையில் இன் சமாம் உல் ஹக்கிற்கு 20 வீதமும், ஏனைய வீரர்களுக்கு 10 வீதமுமாக அபராதம் விதித்துள்ளது.

கிரிக்கெட் என்பது தனியாள் தொடர்பான ஆட்டமல்ல. அது ஒரு குழு சார்ந்தது. துடுப்பாட்ட வீரர் ஒருவர் இந்தத் தவறைச் செய்யுமிடத்து அது அவரை மட்டுமே பாதிக்கும். அதாவது ஆட்டம் தொடங்கிய பின்னர் துடுப்பாட்ட வீரர் ஆடுகளம் செல்வதற்கு காலதாமதமானால், TIME OUT மூலம் அவர் ஆட்டமிழக்கும் வாய்ப்புள்ளது. ( ஒரு வீரர் ஆட்டமிழந்து இரண்டு நிமிடங்களுக்குள் அடுத்த வீரர் களத்தினுள் வராவிட்டால், முறையீடு செய்யும் பட்சத்தில் வழங்கப்படும் OUT. இவ்வாறு ஒருவரும் இதுவரை ஆட்டமிழக்கவில்லை என்றாலும் , இதனால் நன்மையே கிடைத்திருக்கிறது)

எனவே இவ்வாறானதொரு முறையை ICC பந்துவீச்சுக்கும் அறிமுகப்படுத்தலாம்.

ஆனாலும் பந்து வீச்சென்பதை தனிநபர் சம்பந்தப்பட்ட விடயமாக எடுத்துக்கொள்ள முடியாது. பந்து வீச்சாளர், கப்டனுடன் தனது பந்துவீச்சுக்கேற்ப வியூகங்களை ஏற்படுத்திக் கொள்வதனாலும், அதற்கேற்ப கப்டன் ஏனைய வீரர்களுடன் களத்தடுப்பை அமைத்துக் கொள்வதனாலும், இங்கு இயல்பாகவே நேரப்பிரச்சினை தலைதூக்குகின்றது. அதற்காக அணித்தலைவர் அதனை அப்படியே விட்டுவிடவும் முடியாது. வெற்றி, தோல்விகளுக்கு அப்பால் நிர்ணயிக்கப்பட்ட நேரத்துக்குள் (SCHEDULED TIME) போட்டியை முடிவுக்குக் கொண்டு வருவதும் அணித் தலைவரது கடமையாகிறது.

எனவே பாகிஸ்தான் வீரர்கள் விடயத்தில் பந்துவீச்சாளர்கள் அதிக நேரத்தை எடுத்துக் கொண்டதற்காகவும், அதனைக் கட்டுப்படுத்தத் தவறிய கப்டன் இன்சமாம் உல் ஹக்கிற்கு, அவர்களை விடக் கூடிய அபராதம் விதித்ததற்காகவும், ICC யின் செயற்பாட்டை ஒரு வகையில் மறுதலிக்கவும் முடியவில்லை.

அத்தோடு இதன்ன ICC யின் குற்றச்சாட்டுக்களுக்கான தீர்வின் முதற்படியாகவும் எடுத்துக்கொள்ளலாம் அல்லவா.

மக்டலினின்

# தயவு செய்து உயிர் கொடுங்கள்


டடென்டா தைபு முள்ளில் சிக்கிய ரோஜா

டடென்டா தைபு. அறிமுகப்படுத்தப்பட வேண்டிய பெயரல்ல இது. சிம்பாப்வே கிரிக்கெட், அரசியல் பிரச்சினைகளால் அல்லாடி அதன் அணித்தலைவர் ஹீத் ஸ்ரீக் தலைமைப் பதவியில் இருந்து நீக்கப்பட, அதன் காரணமாக சிம்பாப்வே அணியின் வெள்ளையின வீரர்களும் அணியில் இருந்து விலகிக்கொள்ள, சிம்பாப்வே அணி திடீரென்று காணாமல் போயிற்று. இந்த நிலையில் தான் கறுப்பின வீரரும், அணியின் விக்கெட் காப்பாளரும் மிகுந்த திறமை கொண்டவருமான சர்வதேச கிரிக்கெட் உலகின் சாதனையாக இருபது வயதேயான தைபு அணித்தலைவராக்கப்பட்டார்.

அவர் அணித்தலைவராகி மேற்கிந்தியத் தீவுகளுக்கு 2000ஆம் ஆண்டில் சுற்றுப்பயணம் செய்தபிறகு, அங்கிருந்து இங்கிலாந்துக்கு சென்றபோது– "நான் இன்னும் இருபது வருடங்களுக்கு எனது தாயகத்துக்காக கிரிக்கெட் விளையாடுவேன்" என்று கூறியிருந்தார். ஆனால் இன்று சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து விலகிக் கொள்ளப்போகும் மிக இளவயதான அணித்தலைவரும் தைபு தான் என்று சாதனை புரியப் போகிறார்.

நான் முற்றுமுழுதாக சிம்பாப்வே கிரிக்கெட்டின் உறவுகள் அத்தனையையும் அறுத்துக்கொள்ளப் போகிறேன் என்கிறார் அவர். கடந்த சில வருடங்களாகவே சிம்பாப்வே கிரிக்கெட் நடவடிக்கைகள் எனக்கு அதிருப்தியாகவே இருந்தன. அதுவே எனது விலகலுக்கான 80 வீதமான காரணமாகும், ஒப்பந்த முரண்பாடுகள் 20 வீதமெனக் கொள்ளலாம் என்று கூறுகிறார் தைபு.

மறுபுறம் சிம்பாப்வே கிரிக்கெட் சபை தைபுவின் வெளியேற்றம் பற்றி ஆச்சரியம் தெரிவித்துள்ளது. இதுவரை செய்யமுடியாத பணம் சார்ந்த காரணமொன்றைத் தவிர வேறொன்றுமில்லை என்று கூறியிருக்கிறார்கள் அவர்கள். தைபு தனது முடிவில் உறுதியாக இருக்கிறார். எனது மனைவியும் என் தொழில்சார்ந்த நடவடிக்கைகளால், எனக்கு ஏற்பட்ட பாதிப்புக்களால் மனம்நொந்து போயிருக்கிறார். அதோடு எனக்கு மூன்றே வாரம் நிறைந்த குழந்தையும் இருக்கிறது. மனைவியின் கருத்துக்கும் மதிப்பளிக்க வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது என்கிறார்.


றொபட் முகாபே புதிதாகச் சிந்தியுங்கள்

தைபுவின் எண்ணம் இங்கிலாந்து செல்வது. அங்கு தனக்கு நெருக்கமான நண்பர்கள் இருப்பதாகவும், அவர்கள் மூலம் தனது கிரிக்கெட் வாழ்க்கையை தொடர முடியும் என்றும் நம்புகிறார் அவர்.

எது எவ்வாறாயினும் தைபுவின் இழப்பு சிம்பாப்வேக்கு பேரிழப்பு என்பதில் சந்தேகமில்லை. மறுபுறம் 2000ஆம் ஆண்டிலிருந்து நடைபெறும் சம்பவங்களைப் பார்த்தால், கிரிக்கெட் உலகப்படத்தில் இருந்து சிம்பாப்வே மறைந்துவிடும்போல் இருக்கிறது. தயவு செய்து யாராவது காப்பாற்றுங்களேன்.

அன்ரனியின்

# பிறேசிலின் மைந்தன்

மீண்டும் செய்திகளில் றொனால் டின்ஹோ. இதனால் பிறேசில் விழாக்கோலம் பூண்டுள்ளது. கடந்த திங்கள் அறிவிக்கப்பட்ட EUROPEAN FOOT BALLER - 2005 றொனால் டின்ஹோவுக்கு. பிரான்சின் விளையாட்டுத்துறை சஞ்சிகையான FRANCE FOOT BALL. இந்த சஞ்சிகை ஐரோப்பிய விளையாட்டுத்துறை பத்திரிகையாளர்களைக் கொண்டு நடத்திய போட்டியில் றொனால் டின்ஹோ இந்த விருதைப் பெற்றுள்ளார். பார்சலோனா அணிக்காக விளையாடும் றொனால் டின்ஹோ இவ்வருடத்தில் பெறும் 3ஆவது விருது இதுவாகும். பார்சலோனா அணி PRIMERA LIGA சம்பியன்ஷிப் வெற்றிக் கிண்ணத்தைப் பெற கடும் பங்களிப்புச் செய்த றொனால் டின்ஹோவிற்கு இதுவொரு பரிசு என்கிறார் ஒரு விமர்சகர்.


றொனால்டின்ஹோ உலகத்தை உருட்டுகிறான்

இந்த விருதை முன்பு பெற்ற வீரர்கள் மற்றும் அரங்கம் நிறைந்த பிரமுகர்கள் மத்தியில் இவர் இந்த வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றபோது, மகத்தான வீரர்களெல்லாம் கையொலி எழுப்ப நான் இந்த விருதைப் பெற்றது ஏதோ கனவு கண்டது போலவே உணர்ந்தேன் என்கிறார். இந்த நிகழ்ச்சி எனக்கு ஊக்கத்தைக் கொடுத்துள்ளதுடன் இந்த மகத்தான வீரர்களைப் பின்பற்ற வேண்டும் என்ற அவாவையும் ஏற்படுத்தியுள்ளது என்பவர், என் வாழ்க்கையை நடத்திச் செல்ல எனக்கு வருமானம் தரும் வழியாக நான் விரும்பிய உதைபந்தாட்டத்துறையைத் தேர்ந்தெடுத்தேன். அது எனக்கு வாழ்வளித்தது மட்டுமன்றி, இன்னும் பல்லாயிரக்கணக்கானோரை மகிழ்ச்சிப்படுத்த எனக்கொரு சந்தர்ப்பம் கிடைத்ததும் பெரும் மகிழ்ச்சியே என்கிறார்.

கடந்த வருடம் FIFA இன் உலகத்தின் சிறந்த வீரராகத் தெரிவு செய்யப்பட்டவர் இவர். இம்மாதம் மீண்டும் FIFA இந்த விருதுக்காக ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அநேகர் 2005ஆம் ஆண்டு FIFA உலக வீரர் றொனால் டின்ஹோ என்றே நம்புகிறார்கள். அது நிறைவேற இவருக்கு வாழ்த்துக்கள்.

விளையாட்டு அரங்கம்



# நோய்த் தொற்றிலிருந்து விடுபடுவதற்கு கொதித்தாறிய நீரைப் பருகுதல் வேண்டும்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜெயக்குலராஜா

முல்லைத்தீவு —

மழை நீர் தேங்கி நிற்பதால், அதனால் ஏற்படுகின்ற தொற்று நோய்களிலிருந்து விடுபடுவதற்கு கொதித்தாறிய நீரினைப் பருகுவதே சிறந்த வழிமுறையாகும் என முல்லைத்தீவு மாவட்டப் பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜெயக்குலராசா தெரிவித்துள்ளார்.

அண்மையில் பெய்த கன மழை காரணமாக முல்லைத்தீவு இடைத்தங்கல் முகாம்களில் உள்ள குடிசைகளைச் சூழ மழைநீர் அதிகம் தேங்கியுள்ளது. இதனால் குடிநீர், மலசல கூடம் போன்ற தேவைக்கான நீரைப் பெறுவதில் மக்கள் பல சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

இதனால் அங்கு தேங்கியுள்ள நீரின் மூலம் - வயிற்றோட்டம், நெருப்புக் காய்ச்சல், மலேரியா, செங்கண்மாரி போன்ற தொற்று நோய்கள் ஏற்பட அதிக வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் உண்ணாப்புலவு இடைத்தங்கல் முகாமில் 15 பேருக்கு இதுவரை செங்கண்மாரி நோய் ஏற்பட்டு, சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

எனவே இவற்றிலிருந்து நாம் விடுபட அனைவரும் சுட்டாறிய நீரினையே பருகவேண்டும் என இடைத்தங்கல் முகாமில் உள்ள அனைத்து மக்களுக்கும், ஏனையோருக்கும்முக்கிய வேண்டுகோளாக அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# புகழேந்தியின் "புயலின் நிறங்கள்" அறிமுகவிழா கிளிநொச்சியில்

கிளிநொச்சி —

ஓவியர் புகழேந்தியின் 'புயலின் நிறங்கள்' நூல் அறிமுகவிழா - கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இந்த வெளியீட்டுவிழா நிகழ்வில் - பொதுச் சுடரை மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியை கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கரிகாலன் ஏற்றி வைத்தார். ஈகச்சுடரை தமிழீழ நுண்கலைக் கல்லூரியின் பணிப்பாளர் தணிகைமாறன் ஏற்றி வைத்தார்.

வரவேற்பு உரையை தமிழீழ தொலைக்காட்சி பிரதம செய்தி ஆசிரியர் கருணாகரன் நிகழ்த்தினார். தலைமையுரையை அடுத்து முதற் பிரதியை தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் வெளியிட்டு வைக்க ஆதிலக்ஷ்மி சிவகுமார் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து சிறப்புப் பிரதியை புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன் மகளிர் அரசியற் துறைப்பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் வழங்கினர்.

வெளியீட்டுரையை மலைமகள் நிகழ்த்தினர். அரசண்ணா நிலாந்தன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

# வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள சேதங்களை புனரமைப்பதற்கு பெருமளவு நிதி தேவை

## கரைச்சி பிரதேசசபை ஆணையாளர் பொன் நித்தியானந்தன்

கிளிநொச்சி —

வன்னிப் பிரதேசத்தில் வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்களை புனரமைக்க பெருமளவு நிதி தேவைப்படுவதாக சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் தெரிவித்தன.

மழை காரணமாக குளக்கட்டுக்கள், வாய்க்கால்கள் பலத்த சேதமடைந்துள்ளன. இதேபோல் வீதிகளும், மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி நகரப்பகுதி வீதிகளும், புதுக்குடியிருப்பு நகர வீதிகளும் அதிகளவில் சேதமாகியுள்ளதால், பொதுமக்கள் போக்குவரத்து செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த பிரதேச வீதிகளை மீள் புனரமைப்பு செய்ய அதிகளவு நிதி தேவைப்படுவதாக கரைச்சி பிரதேச சபை சிறப்பு ஆணையாளர் பொன் நித்தியானந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமது பிரதேச சபை தமிழீழ நிர்வாக சேவையின் மேலான ஒத்துழைப்புடன் வெள்ளத்தால் அரித்துச் செல்லப்பட்ட வீதிகளை கிறவல் மண்கொண்டு பிரதேச சபை ஊழியர்கள் தற்காலிகமாகச் சீர்செய்து வருவதாகவும், இந்த வீதிகள் யாவும் மீண்டும் நிரந்தரமாக புனரமைப்பு செய்யப்படவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளில் வெள்ளத்தால் வீடுகளை இழந்தும் ஏனைய வழிகளிலும் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் பெருமளவில் பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளதால், பாடசாலைகளில் நடைபெறவுள்ள வருடாந்த பரீட்சைகள் பாதிப்படையும் எனவும், இவ்வாறு தஞ்சமடைந்தவர்களை வேறு பாதுகாப்பான பொது மண்டபத்தில் தங்குவதற்கு வசதி செய்து கொடுக்கவேண்டும் எனவும் வேண்டப்பட்டுள்ளது.

# பட்டப்பின் கல்வி டிப்ளோமா பரீட்சையை வவுனியா வளாகத்தில் நடத்தகோரிக்கை

வவுனியா —

வவுனியா வளாக பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கான தெரிவுப் பரீட்சையை வவுனியா வளாகத்தில் நடத்துமாறு கோரிக்கை ஒன்றைப் பரீட்சார்த்திகள் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் முன்வைத்துள்ளனர்.

இந்தக் கடிதத்தை கவனத்தில் எடுக்குமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது - பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்கு சுமார் 700 ஆசிரியர்கள் தோற்றவுள்ளதாகவும் -

தற்போது 3ஆம் தவணைப் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருப்பதால் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த ஆசிரியர்கள் பரீட்சைக்காக யாழ்ப்பாணம் செல்வதால், பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள் எனவும்,

கடந்த காலத்தில் மிகக் குறைவான பரீட்சார்த்திகள் இம் மாவட்டங்களிலிருந்து தோற்றிய வேளையில் வவுனியா வளாகத்திலேயே இந்தப் பரீட்சை நடைபெறவுள்ளதாகத் தெரிகின்றது.

தற்போது கூடுதலான ஆசிரியர்கள் இந்தப் பரீட்சைக்கு தோற்றவுள்ளதால் 3ஆம் தவணைப் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருப்பதால், வன்னி பிரதேச மாணவர்களது கல்வி நிலையைக் கவனத்தில் எடுத்து வேறு ஒரு திகதியில் இந்தப் பரீட்சையை வவுனியா வளாகத்தில் நடத்த நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காலச் சுவட்டில்...

## இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

### டிசம்பர் 04

1798 : முதன் முதலாக வருமான வரி அறவீடு செய்வது பிரிட்டனில் வில்லியம் பிட் என்பவரால் அறிமுகம் செய்யப்பட்டது.

1832 : அமெரிக்காவில் அடிமை எதிர்ப்புச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

1872 : "பெர்முடாமுக் கோணத்தில் மேரி செலஸ்ட்டா" என்ற கப்பலில் பயணம் செய்துகொண்டிருந்த கப்பல் ஊழியர்கள் அனைவருமே மாயமாக மறைந்து போயினர்.

1917 : இழப்பீடு கொடுக்கவும், நியாயமான தீர்வு காணவும் ஜேர்மனிய மக்கள் உடன்பாட்டால் உடனேயே சமாதானம் ஏற்பட்டுவிடும் என்று அமெரிக்க அதிபர் உட்ரோ வில்சன் அமெரிக்க காங்கிரசிடம் தெரிவித்தார்.

1917 : செக்கோஸ்லோவேகியா சுயேட்சையான படைப்பிரிவு ஒன்றை அமைப்பதற்கான பிரகடனத்தில் பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் பிச்சோன் கையெழுத்திட்டார்.

1918 : செர்போ – குரோட் – ஸ்ரூலர வென் சாம்ராஜ்ஜியம் உருவானது. இளவரசர் அலக்ஷாண்டர் இதன் மன்னரானார். இந்தச் சாம்ராஜ்ஜியத்தின் பெயர் 1929 இல் யூகோஸ்லேவியா என்று மாற்றப்பட்டது.

1925 : முதன் முதலாக வானொலி மூலம் சிட்னியில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியின் நேரடி வர்ணனை ஒலிபரப்பு செய்யப்பட்டது.

1942 : இரண்டாம் உலகப்போரில் அமெரிக்க போர் விமானங்கள் முதன் முதலாக நேப்பின்ஸ் நகர் மீது தாக்குதலைத் தொடங்கின.

1945 : அமெரிக்கா ஐக்கிய நாடுகள் சபையில் இணைவதற்கு அமெரிக்க செனட் அங்கீகாரம் அளித்தது. முதல் உலகப்போரின் பின் சர்வதேச சங்கத்தில் அமெரிக்கா இணைய அமெரிக்க செனட் அங்கீகாரம் அளிக்க மறுத்தது குறிப்பிடத்தக்கது.

1955 : அமெரிக்காவில் பஸ்களில் கறுப்பு இனத்தவர்களுக்கு தனியாக இட ஒதுக்கீடு செய்தமையைக் கண்டித்து, கறுப்பினத்தவர்கள் ஆர்ப்பாட்டம் செய்ய ஆரம்பித்தனர்.

1957 : மங்கோலியாவுக்குத் தெற்கே கோபி, அல்டாய் மையமாகக் கொண்டு, மிகப்பெரிய நில நடுக்கம் ஏற்பட்டது. சன சந்தடியற்ற பகுதியில் இது ஏற்பட்டது. இருந்தும் 150 கி.மீ அப்பாலிருந்த மூன்று கிராமங்கள் முற்றாக அழிந்தன.

1965 : அமெரிக்கா ஜெமினி – 7 என்னும் விண்கலம் இரு விண்வெளி வீரர்களுடன் ஏவியது. இந்த விண்கலம் பதின்னான்கு நாட்களில் இருநூறு தடவைகள் பூமியை வலம்வந்தபின்னர் அத்திலாந்திக் மாகடலில் இறங்கியது.

1967 : இந்தியா தானே வடிவமைத்த ரோகினி – ஆர் என்ற செயற்கைக் கோளை விண்ணில் செலுத்தியது.

1977 : தீவிரவாதக் குழு ஒன்றினால் கடத்திச் செல்லப்பட்ட மலேஷிய விமானம் ஒன்று விழுந்து நொருங்கியது. 100 இற்கும் மேற்பட்டவர்கள் இறந்து போயினர்.

1977 : மத்திய ஆபிரிக்க குடியரசை, மத்திய ஆபிரிக்க சாம்ராஜ்ஜியமாக மாற்றி, அதன் ஜனாதிபதி "ஜீன்பிடில் பொகாஸ்ஸா" சக்கரவர்த்தியாக முடி சூடிக்கொண்டனர்.

1981 : இந்தியாவின் வரலாற்றுச் சின்னமான, டில்லியில் இருக்கும் குதுப்மினார் கோபுரத்தை ஏறிப் பார்க்கச் சென்றபோது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி பலர் இறந்து போனார்கள்.

1982 : சீனாவில் புதிய அரசியல் சட்டம் அமுலுக்கு வந்தது.

1983 : பெய்ரூட்டிற்குக் கிழக்கே மலையிலுள்ள சிரிய விமான எதிர்ப்புத் தளங்களை அமெரிக்க விமானங்கள் குண்டுவீசித் தாக்கின. இரு விமானங்களை சிரியா சுட்டு வீழ்த்தியது.

1989 : இந்தியாவின் முப்படைகளையும் சேர்ந்த ஆறு வீரர்கள் "I.N.S.V சமுத்திரா" என்ற கப்பலில் பம்பாயிலிருந்து புறப்பட்டு 377 நாட்களில் உலகைச் சுற்றிவிட்டு விசாகப்பட்டினம் வந்து சேர்ந்தனர்.

1990 : தமது நாட்டில் பிடித்து வைத்திருக்கும் மூவாயிரம் ரஷ்ய நிபுணர்களையும் பணையதொகை கொடுத்தால் விடுவிப்பதாக ஈராக் அறிவித்தது.

தொகுப்பு : – சந்துரு

# மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு சமாதானமும், சமத்துவமும் நிகழ்வு

வவுனியா —

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வவுனியா மாவட்ட மனித உரிமைகள் ஆனைக்குழுவினால் சமாதானமும், சமத்துவமும் என்னும் நிகழ்வு - வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் - பிரதம விருந்தினராக - வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ஷாள்ஸ் கலந்து கொண்டார்.

மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு சமாதானமும், சமத்துவமும் என்ற பொருளில் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட படங்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் - மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உயர் அதிகாரிகள், சமாச அதிகாரிகள் மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

மனித உரிமைகள் தினமாக டிசம்பர் 10 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வளங்களைக் கொண்டே விடுதலைக்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றோம்

## மட்டு.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன்

மட்டக்களப்பு —

எங்களின் வளங்களைக் கொண்டே விடுதலைக்கான பாரிய நடவடிக்கைகளில் நாம் அனைவரும் ஈடுபட்டுக் கொண்டு வருகின்றோம் என மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் தெரிவித்தார்.

பன்சேனையில் கடந்த வியாழக்கிழமை திறந்துவைக்கப்பட்ட தியாக தீபம் திலீபன் மருத்துவமனை திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ்மக்களின் உரிமைகள், வளங்கள் யாவும், சிங்களப் பேரினவாதிகளால் மறுக்கப்பட்டிருக்கின்ற போதிலும், நாம் கல்வி, மருத்துவம், பொருளாதாரம் போன்றவற்றில் முன்னேற்றமான முறையில் இருக்கிறோம். அந்தவகையில் ஒன்றாக இந்தத் திலீபன் மருத்துவமனையும் அடங்குகிறது.

எம்மை எவரும் சீண்டாத வகையில் நம்பிக்கையுடனும், உறுதியுடனும் தேசியக் கட்டுமானத்திற்கு அமைவாக இயங்க நாங்கள் தயாராக இருக்கவேண்டும். அப்போதுதான் எமது இனத்திற்கான விடிவு விரைவில் கிடைக்கும். எமக்காகவும், மண்ணுக்கானவும் எம்மை விட்டுப் பிரிந்த மாவீரர் செல்வங்களை ஒரு கணம் மனதில் நிறுத்த வேண்டும். அவர்களின் குறிக்கோளை நாம் நிறைவேற்ற ஒன்று சேர்ந்து செயற்படவேண்டும். இதற்கு எமக்குக் கிடைத்திருக்கும் ஒப்பற்ற தலைவன் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் விடுதலை சார்ந்த நம்பிக்கையில் உறுதியும், இறுதியுமான முடிவுகள் எடுத்துள்ளார் எனக் கூறினார்.

நமது ஈழநாடு

**வைர வரிகள்**

திபொறுக்க முடியாமல் கஷ்டப்பட்டதைப் பின்னர் இனிமையாக நினைவு கூரலாம்.

*- போர்த்துக்கீசியப் பழமொழி -*

## நமது நோக்கு

### அரசின் புதிய சமாதான வியூகங்கள் புதிய அரசியல் சதிக்கான முயற்சிகளே!

ஜனாதிபதி மகிந்த தலைமையிலான புதிய அரசாங்கம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகவும், அதற்கான சமிக்ஞைகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அமைச்சரவை இணைப்பேச்சாளர் டியூ குணசேகர ஊடகவியலாளர்களுக்குக் கூறியுள்ளார்.

அது மட்டுமல்ல, இனிமேல் யுத்தம் வருமென்று எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் நம்பிக்கையூட்ட முனைந்துள்ளார்.

ஆனால், ஊடகத்துறை அமைச்சரான அனுர பிரியதர்ஷன யாப்பவோ இனப்பிரச்சினைத் தீர்வுக்கு - சகல கட்சிகளுடனும் பேசி ஒரு பொது இணக்கப்பாட்டுக்கு வரும் நோக்குடன் ஒவ்வொரு கட்சிகளுடனும் தனித்தனியாகப் பேச்சுக்களை மேற்கொள்ளவுள்ளதாகக் கூறியுள்ளார்.

இன்றைய அரசின் முரண்பாடான கொள்கைகளுக்கு இது சிறந்த உதாரணமாகும்.

ஏற்கனவே நோர்வே அரசின் அனுசரணையுடன் கடந்த நான்காண்டுகாலமாக மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளின் இன்றைய நிலைப்பாட்டைக் கவலைக்குரிய ஒன்றாக மாற்றியவர்கள் யார் என்பதற்கு விளக்கம் கூற வேண்டிய அவசியமேயில்லை.

முன்னாள் ஜனாதிபதி, ஐ.தே.முன்னணி ஆட்சிக்கால பிரதமர, இந்நாள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் பங்காளிகள், இன்றைய பிரதமர், பௌத்தமத பீடங்கள் என அனைத்துத் தரப்பினருக்கும் அதில் சமஅளவு பங்குண்டு என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமேயில்லை. இவர்கள் அனைவரும் சமாதானம் என்றசொல்லைப் பயன்படுத்திக்கொண்டு அதற்கு எதிராகவும், தமிழ் மக்களுக்கு எதிராகவும் சமாதான காலத்தில் மேற்கொண்ட நகர்வுகளும், அமைத்த சதிவியூகங்களும் பகிரங்கமாகிவிட்ட விடயங்களாகும்.

இதனை சர்வதேச சமூகமோ, சமாதான அனுசரணையாளர்களோ நிராகரிக்க முடியாது. அவர்கள் நிராகரித்தாலும் தமிழ் மக்கள் அதனை ஏற்றுக்கொள்ளப் போவது கிடையாது.

இலங்கையின் கடந்தகால ஆட்சியாளர்கள் அனைவரும் - அதாவது, பண்டாரநாயக்கா முதல் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவரை எல்லோருமே இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றை எட்டப்போவதாகக் கூறிக்கொண்டு தமிழர் தரப்பு தலைமைகளுடன் நேரடியாக பேச்சு நடத்த முற்பட்டு, அமைதி முயற்சிகளை பேரினவாத சிந்தனையுடன் அணுகி, தமிழ் மக்களை சமாதானத்தின் பேரால் ஏமாற்றி அவர்களின் அரசியல் - வாழ்வியல் உரிமைகளை அரசியல் சதிவியூகங்கள் மூலம் அபகரிக்க முயன்ற வரலாறு மறக்கக் கூடிய ஒன்றல்ல.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தின் நியாயத்தன்மையை ஏற்றுக்கொள்ள மறுத்து, அவர்கள் மீது அரசியல் ரீதியிலும் இராணுவ ரீதியில் அடக்குமுறை அழிப்பு நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்துவிட்டு, பல தசாப்தகாலப் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்ற பெயரில் கொடிய போரொன்றை நடத்தியவர்களும், அதனை நியாயப்படுத்தியவர்களும் இன்று ஒரே அணியில் ஒன்றிணைந்துள்ளார்கள்.

அந்த அணியைச் சேர்ந்தவர்களின் சமாதான நகர்வு தொடர்பான கருத்து நிலைப்பாடு முன்னைவிட இன்னமும் மூர்க்கம் கொண்டதாகவும், பேரினவாத வெறிமிக்கதாகவும் உள்ள சூழ்நிலையில் - அனைத்துக் கட்சிகளுடனும் தனித்தனியாகப் பேசி இணக்கம் காண புதிய ஜனாதிபதி முயல்வது கோமாளித்தனமான நடவடிக்கையாகவே தென்படுகிறது. நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகளின்போது இந்த இனவாதக் கட்சிகள் அனைத்தினதும் இனவெறியூட்டும் பிரசாரங்களுக்கு ஆமாம்போட்ட - சமாதான முயற்சிகளின் தற்போதைய நகர்வனைத்தையும் நிராகரித்த ஜனாதிபதி - இப்போது அவர்களை இணங்கவைக்கப் போவதாகக் கூறுவதிலும் அர்த்தமெதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

இதேவேளை, இதேபோன்று சர்வகட்சி பேச்சுக்கள், மாநாடுகள், ஆலோசனைகள் பல கடந்த நான்கு தசாப்த காலத்தில் சிங்களத் தலைவர்களால் மேற்கொள்ளப்பட்ட போதும் சமாதானம் வரவில்லை. தமிழ் மக்கள் மீதான யுத்தம் தீவிரமாக அவர்கள் மேலும் மேலும் அடக்குமுறைகளுக்குள்ளான அத்தியாயங்களையே சரித்திரம் இரத்தத்தால் பதிவுசெய்துள்ளது.

எனவே, சர்வகட்சி பேச்சு, இணக்கப்பாடு, அதனடிப்படையில் பேச்சு, அதன்மூலம் தீர்வு என்பதெல்லாம் வெறும் காலம்கடத்தும் கண்துடைப்பு நடவடிக்கைகளேயாகும்.


சர்வதேச அனுசரணையுடன் அவர்களின் கண்காணிப்பில் நடைபெறும் பேச்சுக்களே இந்த நான்காண்டு காலத்தில் எதனையும் நம்பிக்கையூட்டும் வகையில் சாதிக்காத நிலையில், அவர்களை இதுநாள்வரை பேய்க்காட்டி வரும் அரசை நம்பி தமிழர் தரப்பு நேரடிப் பேச்சுக்களில் கலந்துகொள்ளுமென அரசு நினைக்குமானால் அது அரசியல் சூழல் யதார்த்தத்திற்கு பொருந்தாத ஒரு கனவேயாகும்.


ஆக, எல்லாவகையிலும் அமைதி முயற்சிகள் தொடர்பான புதிய ஆட்சித் தலைமையின் உத்திகள், புதிய அரசியல் ஏமாற்றச்சதிக்கான வியூகங்களாகவே தமிழ்மக்களுக்குத் தென்படுகின்றன.

கடந்தகால அனுபவ அறிவு - அவர்களை இனியும் ஏமாறாதீர்கள் என எச்சரிக்கை செய்வதை அவர்கள் உணர்வுபூர்வமாக அறிந்தேயுள்ளனர்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்



# மனிதத்தை ஆதரிக்கின்ற - பேசுகின்ற குரலாகவே எனது ஓவியங்கள் உள்ளன


## தமிழக ஓவியர் புகழேந்தி

கடந்த 23 வருடங்களாக கலை வாழ்க்கை மற்றும் பொது வாழ்க்கையில் ஈடுபட்டு வருகின்றேன். கலைவாழ்வு, பொதுவாழ்வு, இரண்டுமே என்னோடு ஒன்றிணைந்தவை. குறிப்பாக, என்னுடைய ஆரம்பகால ஓவியங்கள் ஈழத்தமிழர்களின் இன்னல்களையும், பிரச்சினைகளையும் ஓவியங்களாக்கி தமிழகத்தில் மட்டுமல்ல, உலகின் பல்வேறு இடங்களிலும் காட்சிப்படுத்தியிருக்கின்றேன். ஈழத்தமிழர்கள் மட்டுமல்லாது பலதரப்பட்ட மக்களது அனுபவங்களையும் எனது ஓவியத்தின் மூலமாக வெளிப்படுத்தி வருகின்றேன்.

நான் பல்வேறு ஈழப்போர் வரலாற்றுப் பதிவுகளையும் ஓவியமாக வரைந்திருக்கின்றேன். ஈழப்போரில் எந்த மக்கள் பாதிக்கப்பட்டார்களோ, எந்த மண்பாதிக்கப்பட்டதோ, அந்த மண்ணிலே, அந்த மக்கள் மத்தியிலே ஓவியங்களாக வைத்து அவர்களிடத்திலே இந்த ஓவியங்களைக் கொண்டு செல்ல வேண்டும். இந்தப் படைப்பிலே நாம் பேசுகின்ற செய்திகளை அவர்கள் உணர்ந்து கொள்வேண்டுமென்பது தான் எனது நோக்கம்.

அப்போது ஒரு ஓவியனாக இந்தப் போராட்டத்திற்கும், மக்களிற்கும் என்ன செய்ய முடியுமென்று நான் சிந்தித்ததன் விளைவு - இந்த ஈழமக்களுடைய உரிமைப் போராட்டத்தை ஓவியமாக வடித்து, அவர்கள் பட்ட இன்னல்களை, அனுபவித்த சித்திரவதைகளை ஓவியமாக வரைந்து மக்கள் மத்தியிலே கொண்டு செல்ல வேண்டும். அதன் மூலம் இந்தப் போராட்டத்திற்கு ஒரு ஆதரவைப் பெற்றுத்தர வேண்டும். அதை உலக மக்கள் மத்தியிலே படைப்பாக்கமாகக் கொண்டு செல்ல வேண்டும். அதன் மூலம் இப்போராட்டம் கூடுதலான கவனத்தைப் பெறும் என்பது அடிப்படையிலேயே அத்தகையவெளிப்பாடுகளை ஓவியங்களாகத் தொடர்ந்து வெளிப்படுத்திவருகின்றேன். அந்த அடிப்படையில்தான் இன்று உலக அளவில் எது நடந்தாலும் மனிதத்தை ஆதரிக்கின்ற மனிதத்தைப் பேசுகின்ற குரலாக என்னுடைய ஓவியங்கள் இருந்து வருகின்றன. அடக்குமுறைகள் எந்த ரூபத்தல் இருந்தாலும் அது நிறவெறியாகவோ அல்லது ஜாதிவெறியாகவோ, மத ஒடுக்கு முறையாகவோ இருந்தாலும் அத்தகைய ஒடுக்கப்பட்ட மக்களின் பக்கம் குரல் கொடுக்கின்ற அல்லது அவர்களின் உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவாகக்குரல் கொடுக்கின்ற ஒரு ஓவியனாக நான் இருக்கின்றேன். அத்தகைய பார்வையை, சிந்தனையை என்னுள் தோற்றுவித்தது ஈழவிடுதலைப் போராட்டம்.

படைப்பு ரீதியாகவும், இயக்க ரீதியாகவும் நாம் எமது உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற போது எந்தவிதமான அச்சமும் எனக்குக் கிடையாது. ஏனெனில் நான் நியாயத்தின் பக்கம் நின்று குரல் கொடுக்கின்றேன். ஒடுக்கப்படுகின்ற, அடக்கப்படுகின்ற மக்கள் பக்கம் நின்றுதான் பேசுகின்றேன். என்றாலும் அதற்கு அச்சுறுத்தல்கள் வரும் என்று எதிர்பார்த்துதான் நான் அதைச் செய்கின்றேன். விளைவுகளை எதிர்பார்க்காமல் எந்தவொரு செயலையும் நான் செய்வதில்லை. எந்தவொரு



செயலிற்கும் ஒரு எதிர்வினை உண்டு என்று நான் எதிர்பார்ப்பவன். அப்படிச் சில நேரங்களிலே எனக்கு அச்சுறுத்தல்கள் இருந்ததுண்டு, இருக்கிறது. ஆனால் ஒரு படைப்பாளன் அத்தகைய அச்சுறுத்தல்களைக் கண்டு அஞ்சி, ஒடுங்கிவிட முடியாது. உண்மையான படைப்பாளன் துணிவு மிக்கவனாகத்தான் இருக்க வேண்டும். அப்படித்தான் நான் இருக்கின்றேன். ஈழத்தில் நடக்கின்ற பிரச்சினைகளை மட்டுமல்ல, இந்தியாவிலும் உலகமெங்கிலும் நடக்கின்ற அடக்கு முறைகளை எதிர்த்தும் நான் குரல் கொடுக்கின்றேன். வீதிக்கு வந்து போராடுகின்றேன். அடக்குமுறைகள் அரசுகள், அரசு சார்ந்த அமைப்புகள், மதவெறியர்கள், ஜாதி வெறியர்கள் யார் செய்தாலும் அதை எதிர்த்து வீதிக்கு வந்து நான் குரல் கொடுக்கின்றேன்.

இந்த நிலையில் அதற்காக எதிர்வினைகளை நாம் எதிர்கொண்டுதான் ஆக வேண்டும். எல்லோரும் பயந்து கொண்டு பேசுவதை நிறுத்திவிட்டால் இறுதியில் நியாயத்தை உரத்துச் சொல்வதற்கு யாரும் இல்லாமல் போய்விடுவார்கள்.

சிலஉண்மைகள் சிலவேளைகளில் உரத்துச் சொல்ல வேண்டிவரும். சிலவேளைகளில் அது தனித்த குரலாகவும் இருக்கக் கூடும். எல்லோரும் இணைந்து ஒரு செயலைச் செய்ய வேண்டுமென நினைத்தால், அந்தச் செயல் காலம் தள்ளிப் போகும். எத்தனை அச்சுறுத்தல்கள் வந்தாலும் அவை மேலும் என்னைச் சிந்திக்கவும் செயற்படவும் தான் தூண்டுகிறன.

# தமிழ் மக்களின் தீர்ப்பும் மாவீரர் நாள் உரையும்





**சிங்களத்துப் புதிய ஆட்சித் தலைவரின் 'மகிந்தவின் சிந்தனைகள்' எத்தகைய இனவாதப்போக்கைக் கொண்டது. அவர் ஆற்றிய கன்னிப் பேச்சு, அதன்பின் சிறிலங்கா நாடாளுமன்றத்தில் அவர் ஆற்றிய உரை என்பன அவரது சிங்கள - பௌத்த மேலாண்மையைக் காட்டி நிற்பதை எவரும் மறுக்க முடியாது. தலைவரின் போராட்ட வாழ்க்கை சிறிமாவோ காலத்தில் தொடங்கி, ஜே.ஆர். காலம், பிறேமதாச காலம்,டி.பி. விஜயதுங்க மற்றும் சந்திரிகாவின் காலம் என்று தொடர்ந்து, இன்று மகிந்த காலம் வரை வநதுள்ளது. சிங்களத்து ஆட்சித் தலைவர்கள் ஒவ்வொருவரும் அடிப்படையில் சிங்கள - பௌத்த மேலாதிக்கத்தை நிறுவ முனைந்த பொழுதிலும், உதட்டில் சமாதானம் பற்றிப் பேசத் தவறவில்லை.**

சிங்கள தேசத்து ஆளும் தலைவரைத் தமிழ் மக்கள் தேர்ந்தெடுக்கப்போவதில்லை என்ற நிலையிலும், சிங்கள மக்களால் ஆட்சித் தலைவராக மகிந்த ராஜபக்ஷ தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையிலும், ஒற்றையாட்சி அரசியலமைப்புக்குள்ளேயே வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு என்ற மகிந்தவின் நிலைப்பாட்டின் நிலையிலும், அடுத்து என்ன நடக்கப் போகின்றது என்று அனைவருமே தங்களுக்குள் கேள்வி எழுப்பிக் கொண்டிருந்தனர். இந்தக் கேள்விகளுக்கான பதிலை முழு உலகமுமே தமிழீழ தேசியத் தலைவரிடமிருந்தே எதிர்பார்த்திருந்தனர, தமிழீழத் தேசியத் தலைவர் அதிகம் பேசாத செயல்வீரர் எனபது அனைவரும் அறிந்ததே. அதனால்தான் அவரது மாவீரர் நாள் உரையை எப்பொழுதும் உலகம் எதிர்பாரத்துக் காத்திருக்கும். அவ்வாறே இந்த முறையும் மாவீரர் நாள் உரையை உலகம எதிர்பார்த்திருந்தது. அதனால் தான் அவரது உரை உலகத்து முக்கிய முன்னணி ஊடகங்களில் மிக முக்கியத்துவம் கொடுத்து வெளியிடப்பட்டுள்ளது என்பது உண்மையாகும்.

தமிழர் தாயகத்து மக்கள் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணித்ததன் மூலம், தமிழீழத் தேசியத் தலைவரின் பலத்தை உறுதிப்படுத்தியுள்ளனர். ஆனால், இந்தப் புறக்கணப்பைச் சில கொழும்புவாழ் அறிவு ஜீவிகள் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றார்கள் அல்லது தயங்குகிறார்கள் என்பது தெரிகின்றது. இதிலே முக்கியமாகக் கருதப்படுபவர் கலாநிதி பாக்கிய சோதி சரவணமுத்து ஆகும். இவரது கூற்றுப்படி இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள வடக்கு - கிழக்குப் பகுதிகளில் மக்கள் வாக்களிக்கவிடாது தடுக்கப்பட்டார்கள் என்பதாகும். ஆனால், விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மக்கள் தடுக்கப்பட்டார்கள் என்பது தெரியவில்லை என்றும் கூறியுள்ளார். இவர் சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தல கண்காணிப்புக் குழுத் தலைவர் கிங்ஸ்லி றொட்றிக்கோவும் இவ்வாறான கருத்தையே வெளியிட்டுள்ளார். ஐரோப்பிய ஒன்றியக் கண்காணிப பாளர்களினது அறிக்கை விரைவில் வெளிவரவுள்ளது.

இவர்களது கூற்றில் எவ்வளவு தூரம் உண்மை உள்ளது என்பதைச் சிறிய ஒரு நிகழ்வு மூலம் தெரிந்து கொள்ள முடியும். அவர் ஒரு வெள்ளைத் தோல் கொண்ட வெளிநாட்டுத் தேர்தல் கண்காணிப்பாளர். பலநாடுகளுக்குத் தேர்தல் கணிப்புக்குச் சென்றிருந்தாலும், முதன் முறையாக இலங்கைத் தீவுக்குக் கண்காணிப்பாளராக வந்திருந்தார். ஐரோப்பியத்தின் கண்காணிப்பாளராக யாழ்ப்பாணம் வந்திருந்த அவர் இங்கு நடந்த தேர்தலுக்கு நல்ல சாட்சியாவார்.

அவர் ஆச்சரியப்பட்டுப் போனார். மக்கள் தேர்தலில் எந்த வித அக்கறையும் காட்டவில்லையே. வாகுச் சாவடிகளுக்கு முன்பாக உள்ள வீதிகளால் கதைத்துக் கொண்டு போகின்றார்கள், சாவடிப் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்கவில்லையே, தேர்தலொன்று நடைபெறுவதாக அவர்கள் நினைக்கவே இல்லையே, இவ்வாறு உள்ள மக்களை நான் வேறு எந்த நாட்டிலும் காணவில்லையே, அதிசயமான மக்களாக உள்ளனரே என்று ஆச்சரியப்பட்டுப் போனார். இவ்வாறான நிலைமையை வீதியோரத்தில் நின்று மக்களுடன் அவர் பகிர்ந்து கொண்டார். மக்களிடமும் கருத்தைக் கேட்டுக் கொண்டார். அப்பொழுது அவருடன் ஊர்தியில் வந்திருந்த சிங்கள அன்பர், அவரும் தேர்தல் கண்காணிப்புக்கு வந்திருந்தவர். அவர் கூறினார் மக்களுக்கு தேர்தல்களிலோ, வாக்களிப்பதிலோ அக்கறை இல்லை என்று கருதக்கூடாது நான் சென்ற முறை நாடாளுமன்றத் தேர்தலுக்கும் கண்காணிப்பாளராக வந்திருந்தேன். அப்பொழுது இந்த மக்கள் மிகவும் உற்சாகமாக வாக்களிக்க முண்டியத்தனர். அப்பொழுது அவர்களுடைய ஆள்கள் தேர்தலில் போட்டியிட்டார்கள். ஆனால், இப்பொழுது வேறு யாரோ போட்டியிடுவதால் மக்கள் அக்கறை காட்டவில்லை என்று அவர கூறினார். இதைக் கேட்டதும் அந்த வெளிநாட்டவர் மேலும் ஆச்சியப்பட்டார். அப்பொழுது அங்கே நின்றிருந்த ஊடகவியலாளர் ஒருவரிடம் உங்கள் செய்தித் தாள்களில் வாக்களிப்பைப் பற்றி எழுதலாம் தானே என்று கேட்டுள்ளார். அந்த ஊடகவியலாளர் அரசியல் நிலைமையை விளக்கிக் கூறி, எமது செய்தித் தாளிலேயும் தேரதல் புறக்கணிப்பை நியாயப் படுத்தித்தான் எழுதுகின்றோம் என்று கூறியுள்ளார். இதெல்லாம் அவருக்குப் புதுமையாகத் தோன்றியது. இந்த நேரத்தில் அந்த வீதிவழியால் இராணுவ ஜீப வண்டியொன்று வந்தது. பொது மக்கள் நடுவே வெள்ளையர் ஒருவர் நிற்பதைக் கண்டதும் நிறுத்தி விசாரித்துள்ளார்கள். அது ஒரு சாதாரண உரையாடல் தான் என்று அங்குள்ளவர்கள் தெரிவித்ததையடுத்து இராணுவத்தினர் சென்று விட்டனர். இதைப் பார்த்த அந்த வெளிநாட்டவர் இவ்வாறு கதைக்கக்கூட இந்த நாட்டில் உரிமை இல்லையா? ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்று கேள்வி எழுப்பினார். அதன் பின்னர் தான் அவருக்கு இங்கு நடப்பவை பற்றிய சிறு தெளிவு ஏற்பட்டது. இந்த நிகழ்வானது வாக்களிக்க விடாது மககள தடுக்கப்பட்டார்களா? மக்கள் புறக்கணித்தார்கள் என்பதற்கு நல்ல உதாரணமாகும். ஆனால், தேர்தல் மூலம் ஒருவருடைய வெற்றியை எதிர்பார்த்தவர்களால் இந்தப் புறக்கணிப்பைச் ஜீரணிக்க முடியவில்லை. அதனால்தான் வாக்களிக்க விடாது மக்கள் தடுக்கப்பட்டார்கள் என்று கூறுகின்றார்கள். இவர்கள் வேறொன்றையும் கவனிக்கத் தவறிவிட்டனர். இலங்கையில் வாழ்கின்ற கணிசமான தமிழ் மக்களும் வாக்களிக்காது புறக்கணித்துள்ளனர். இவர்களைத் தடுத்தவர் யார்? எனவே, வன்முறை மூலம் வாக்களிப்பைத் தடை செய்து விட்டார்கள் என்பது அடிபட்டுப் போய் விடுகின்றது.

கொழும்பிலே நிரந்தரமாக வாழ்ந்து கொண்டு ஆங்கிலத்தையே வீட்டு மொழியாகக் கொண்டு இருப்பவர்களையும், அவர்களது அரசியல் கருத்துக்களையும் தந்தை செல்வா அன்றே சாடியுள்ளார். கொழும்பிலே வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு யாழ்ப்பாணத்து, மட்டக்களப்பு,திருகோணமலைத் தமிழ் மக்களின் உணர்வுகள் பற்றி எதுவுமே தெரியாது. அந்த மக்களுடன் வாழ்கின்றவர்களுக்கும், அவர்களுடன் நெருங்கிப் பழகுபவர்களுக்கும்தான் தமிழ் மக்களின் உணர்வுகளை அறிந்து கொள்ள முடியும். எனவே, தமிழ் மக்களின் உரிமைகள் பற்றி கொழும்புவாழ் மக்கள் அறிக்கைகள் விட்டுக் குழப்பத் தேவையில்லை என்று அன்று தந்தை செல்வா கூறியிருந்தார். இதையே இன்றும் அவ்வகையான தமிழருக்கான பதிலாக் கொள்ள வேண்டும்.

தேர்தல் புறக்கணிப்பைப் பற்றித் தேசியத் தலைவர் என்ன கூறுகின்றார் என்று பார்ப்போம்.

'தமிழரின் அரசியல் போராட்ட வரலாற்றில் இதுவொரு பாரதூரமான திருப்பத்தைக் காட்டுகின்றது. சிங்கள அரசியல் ஆட்சி முறையில் நம்பிக்கையிழந்த தமிழீழ மக்கள் - தனி வழி சென்று தமது அரசியல் தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கத் துணிந்து விட்டனர் என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது' என்று தெளிவாகக் காட்டுகின்றார். தேர்தல் புறக்கணிப்பின் ஆழம் எத்தகையது. அது கூறும் தார்ப்பரியம் என்ன என்பதைத் தலைவர் மிக ஆழமாகக் கூறுகின்றார். சனநாயக உரிமை மறுக்கப்பட்டுள்ளது என்று கூப்பாடு போடுவோர் தமிழ் மக்கள் அளித்த சனநாயகத் தீர்ப்பைப்பற்றி என்ன சொல்லுவார்களோ தெரியவில்லை. ஆனால், தலைவர் பிரபாகரன் மிகவும் தெளிவாக அந்தப புறக்கணிப்பைப் பற்றிய கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

சமீபத்திய அரச அதிபர் தேர்தலும், அதனை எமது மக்கள் புறக்கணித்ததால் ஏற்பட்ட ஆட்சி மாற்றமும், தமிழ் - சிங்கள, தேசங்கள் மத்தியில் அரசியல் ரீதியாக ஆழமான ஒரு பிளவை ஏற்படுத்தியுள்ளது.

தென்னிலங்கையில் சிங்கள - பௌத்தம் மேலாண்மை பெற்றுள்ள அதேசமயம் தமிழர் தாயகததில் தமிழ்த் தேசியம் நிலைப்பட்டு, பலப்பட்டு எழுச்சிபெற்று வருகிறது.

சிங்களத்தில் மகிந்த ராஜபக்சவின் புதிய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளது. தமிழீழத்திலும் தமிழ்த் தேசிய எழுச்சியின் திண்ணிய வடிவமாக எமது விடுதலை இயக்கத்தின் ஆட்சியமைப்பு விரிவடைநது, வலுவடைந்து இயங்கி வருகிறது என்று தலைவர் கூறியுள்ளார்.

இதிலிருந்து தேர்தல் புறக்கணிப்பு மிகப் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமை தெரிகின்றது. இதன் மூலம் தமிழீழ மக்கள் விடுதலையை விரும்புகிறார்கள் என்பதைக் காட்டியுள்ளனர். இந்த விருப்பமே தமிழீழத் தேசியத் தலைவரின் கரங்களைப் பலப்படுத்தியுள்ளது. தமிழீழ மக்களின் சக்தி முழுமையாக விடுதலைப் புலிகளின் பினனால் திரண்டு நிற்கின்றது என்பதைத் தலைவர் உலகத்திற்கு உணர்த்தியுள்ளார்.

இது மட்டுமல்ல, சிங்களத்துப் புதிய ஆட்சித் தலைவரின் 'மகிந்தவின் சிந்தனைகள்' எத்தகைய இனவாதப்போக்கைக் கொண்டது. அவர் ஆற்றிய கன்னிப் பேச்சு, அதன்பின் சிறிலங்கா நாடாளுமன்றத்தில் அவர் ஆற்றிய உரை என்பன அவரது சிங்கள - பௌத்த மேலாண்மையைக் காட்டி நிற்பதை எவரும் மறுக்க முடியாது. தலைவரின் போராட்ட வாழ்க்கை சிறிமாவோ காலத்தில் தொடங்கி, ஜே.ஆர். காலம், பிறேமதாசா காலம்,டி.பி. விஜயதுங்கா மற்றும் சந்திரிகாவின் காலம் என்று தொடர்ந்து, இன்று மகிந்த காலம் வரை வநதுள்ளது. சிங்களத்து ஆட்சித் தலைவர்கள் ஒவ்வொருவரும் அடிப்படையில் சிங்கள - பௌத்த மேலாதிக்கத்தை நிறுவ முனைந்த பொழுதிலும், உதட்டில் சமாதானம் பற்றிப் பேசத் தவறவில்லை. ஆட்சித் தலைவராக இல்லாமல் ரணில் பிரதம மந்திரி என்ற கோதாவில் சமாதான ஒப்பந்தம் செய்த பொழுதிலும், அவரது சிங்கள - பௌத்த மேலாதிக்கச் சிந்தனை எத்தகையது எனபதைத் தலைவர் சுட்டிக் காட்டியுள்ளார். இந்த நிலையில்தான் மகிந்த தற்பொழுது புதிதாகப் பொறுப்பேற்றுள்ளார். அவர் எத்தகையவர் என்பது யாவரும் அறிந்ததே. அவரைப் பற்றித் தலைவர் தனது மாவீரர் தின உரையில் குறிப்பிட்டுள்ளதையும் நாம் கவனிக்க வேண்டும்.

அவர் (மகிந்த) சிங்கள-பௌத்த மக்களின் நலனைப் பேணும் அரச அதிபராகவே பொறுப்பை ஏற்றிருக்கிறார். அரச அதிபர் மகிந்தவின் சிந்தனைகளையும், கொள்கைகளையும் நாம் நன்கறிவோம்.

தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக அவரது அரசியல் தரிசனத்துக்கும், தமிழரின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்துக்கும் மத்தியிலான இசைவற்ற இடைவெளிகளையும், இணங்காத முரண்பாடுகளையும் நாம் அறிவோம். இவை பற்றி நான இங்கு ஒப்பிட்டு மதிப்பாய்வு செய்ய விரும்பவில்லை என்று கூறும் தலைவர், தமிழ் மக்கள் யுத்தப் பிரியர்கள் அல்ல என்பதை மீண்டும் உலகத்திற்குக் காட்டுவதற்காக மகிந்தவுக்குக் கால அவகாசம் கொடுத்துள்ளார்.

'மகிந்தவின் சிந்தனைகள்' அவர் இனப்பிரச்சினையைத் தீர்கப் போவதாகக் கூறும் வழிகளிலும் உள்ள முரண்பாடுகளைக் கூறிய தலைவர் -

ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்ட சிந்தனைகளை ஆழமாக அலசிப்பார்க்கும் பொழுது தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையின் அடிப்படைகளையோ, அதன் மூலக் கோட்பாடுகளையோ புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. கொள்கை ரீதியாக எமக்கும், அவருக்கும் மத்தியிலான இடைவெளி மிகப் பெரியது.... ஆகவே, ஜனாதிபதி ராஜபக்சவின் நகர்வுகளை அவர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை சிறிது காலம் நாம் பொறுத்திருந்து பார்ப்பதென முடிவு செய்துள்ளோம் என்று தலைவர் குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் ராஜபக்சவின் செயல்களில் நம்பிக்கை எதுவும் கிடையாது என்பதைக் குறிப்பிடும் தலைவர் - வரையறுக்கப்பட்ட குறுகிய காலத்திற்குள் ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்கும்படி மகிந்தவுக்குக் கூறுகின்றார்.

'இது எமது இறுதியான உறுதியான, அவசர வேண்டுகோளாகும் எமது இந்த அவசர வேண்டுகோளை நிராகரித்து, கடும்போக்கைக் கடைப்பிடித்து, காலத்தை இழுத்தடிக்க முற்படுவாரேயானால் - நாம் எமது மக்களுடன் ஒன்றிணைந்து எமது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை எமது தாயகத்தில் தன்னாட்சியை நிறுவும் தேச சுதந்திரப் போராட்டத்தை அடுத்த ஆணடில் தீவிரப்படுத்துவோம்' என்பது தலைவரின் அழுத்தமான எச்சரிக்கையாகும்.

இதன் மூலம் தலைவர் அடுத்த ஆண்டை விடுதலைப் போராட்ட ஆண்டாக அறிவித்துள்ளார் என்பது தெளிவாகிறது. சில ஆய்வாளர்கள் அடுத்த ஆண்டு என்பதை 2007 என்று பொருள் கொண்டு கருத்து வழங்குகின்றனர். ஆனால் ஓராண்டு என்பது குறுகிய காலம் என்று கொள்ள முடியாது. அத்துடன், சுனாமி பேரலை வந்திருக்காவிட்டால் விடுதலைப் போர் எப்பொழுதோ தொடங்கியிருக்கும் என்பதையும் நாம் மறக்க முடியாது. எனவே, காலத்தை இழுத்தடித்து போராட்ட உணர்வை மழுங்கடிக்கவும், கூட்டுப் படைகளின் பெயரைப் பாவித்து அரசும், அரசுப் படைகளும் - போராளிகளையும், விடுதலைக்கு ஆதரவானவர்களையும் பலிகொள்வதையும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்பதைத் தலைவர் மாவீரர் உரையில் கூறியிருப்பதன் மூலம் 2006 தமிழீழத்தின் விடுதலைக்கு வழிகாட்டும். ஆண்டாக மலரும் என்று நம்புவோம். *

**சிலம்பு**

# போர்நிறுத்த மீளாய்வு அவசியமற்றது...

ஐரெனி சுபைடாகானின் கருத்துக்குப் பதிலளித்த சு.ப.தமிழ்ச்செல்வன் - அரச பயங்கரவாதத்துக்கு எதிராகத் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தின் நியாயத் தேவையை விளக்கினார்.

மேலும், சட்டத்திற்கு அப்பாலான படுகொலைகள், மனித உரிமைகள் ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டும், இந்த விடயங்களுக்கு முன்னுரிமை அளித்தும், போர்நிறுத்த ஒப்பந்தத்தின் தேவையைக் கருத்தில்கொண்டும், அதை முழுமையாகச் செயற்படுத்துவதில் உறுதியாக உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் அரசியல் தலைமை இருப்பதாகவும் கூறினார்.

தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்து சு.ப.தமிழ்ச்செல்வன் மேலும் கூறியதாவது -

பேச்சுக்களினூடாக உரிய அரசியல் தீர்வை உருவாக்குவதற்கான அமைதி முயற்சிகளில் முக்கியமானதாக போர்நிறுத்த ஒப்பந்தம் இருக்கிறது.

கடந்த கால போர்நிறுத்த ஒப்பந்தங்களின் அனுபவங்களைக் கவனத்தில் கொண்டு மிக அவதானமாக நீண்ட காலம் விவாதித்தே இந்தப் புதிய ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது.

ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக போரினால் இடப்பெயர்வுக்குள்ளான மக்கள், தங்களது இயல்பு வாழ்க்கையை மீள மேற்கொள்வதற்கான தெளிவான வரையறைகளும், கால எல்லைகளும் இந்த ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ளன.

இந்த கால எல்லைகள் எல்லாம் வெகு காலத்துக்கு முன்பே காலாவதியாகிவிட்டன. இந்தப் போர்நிறுத்த ஒப்பந்தத்தால் எதுவித பயனும் ஏற்படவில்லை என்றே தமிழ் மக்கள் கருதுகின்றனர்.

தமிழர்கள் மீதான இராணுவத்தினது தொடர்ச்சியான ஆக்கிரமிப்பு நீடிக்கிறது. தமிழ் மக்களின் கடலோரப் பிரதேசங்களும், விவசாய நிலங்களும் அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு தமிழர்களின் வாழ்விற்கான அடிப்படை மனித உரிமைகூட மறுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலைமைகளாலும் சுனாமி மற்றும் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களாலும் தமிழ் மக்கள் விரக்தி நிலையில் உள்ளனர். தமிழர்கள் தாங்கள் ஒருவித அரசியல் வெறுமைக்குள் சிக்க வைக்கப்பட்டிருப்பதாகக் கருதுகின்றனர்.

தமிழர் தாயகத்தில் - இராணுவத்தினரது ஆக்கிரமிப்புப் பகுதிகளில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்குரியது.

அந்தப் பகுதிகளில் நடைபெறும் குற்றச் செயல்களுக்கு போர்நிறுத்த ஒப்பந்தத்தின் ஒரு தரப்பினராகிய விடுதலைப் புலிகள் பொறுப்பாக முடியாது.

இருப்பினும், அத்தகைய வன்முறைகளுக்கு இராணுவ புலனாய்வுப் பிரிவும், அவர்களோடு சேர்ந்தியங்கும் ஆயுதக்குழுக்களுமே காரணம் என்பதை நாம் அறிவோம்.

விடுதலைப் புலிகளின் அவதூறு பரப்புவதற்கான அரசியல் செயற்திட்டமாகவே விடுதலைப் புலிகளுக்கு எதிரானவர்கள் என அடையாளம் காணப்படுகின்ற தனிநபர்களை, இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியில் இவர்கள் சுட்டுக் கொல்கின்றனர். இதையே போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும் எமக்குச் சுட்டிக்காட்டியுள்ளது.

போர்நிறுத்த ஒப்பந்தத்தின் சரத்து 1.8 படி இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்கள் களையவேண்டும். இதற்குரிய சரத்தை முழுமையாக செயற்படுத்திடவேண்டும் என்பதே எங்களது அழுத்தமான வலியுறுத்தலாகும்.

இதுபோன்ற சரத்துக்களை தீவிரமாகச் செயற்படுத்துவது குறித்து உடனடிப் பேச்சுக்களை இரு தரப்பினரும் மேற்கொள்ளவேண்டும் என்றும் வலியுறுத்தி, போர்நிறுத்த ஒப்பந்தத்தின் மீதான எமது உள்ளார்ந்த ஈடுபாட்டை நாம் வெளிப்படுத்துகிறோம்.

இந்த ஒப்பந்தத்தை மீளாய்வு செய்யவேண்டிய எதுவித தேவையும் இப்போது இல்லை. அரசாங்கத்தால் இந்த போர்நிறுத்த ஒப்பந்தம் முழுமையாக - உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் செயற்படுத்தப்பட்டால் இருதரப்பு நம்பிக்கை கட்டியெழுப்பப்படுவதோடு, வன்முறைகளும் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு, தமிழ்மக்களும் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பமுடியும். இதற்குரிய அனைத்து அம்சங்களும் இந்த போர்நிறுத்த ஒப்பந்தத்தில் உள்ளன.

இந்த உண்மை நிலைகளை அரசாங்கத்திடம் சர்வதேச மன்னிப்புச் சபை விளக்கவேண்டும். இதைவிடுத்து சிறுவர்களை படைகளில் சேர்க்கிறார்கள் என்ற இல்லாத ஒரு குற்றச்சாட்டை தொடர்ந்து கூறிக்கொண்டு, மனித உரிமை மீறல்களிலும், தமிழ்மக்கள் அமைதியாக வாழ்வதற்கான சூழ்நிலையை நிராகரிப்பதையும் அரசாங்கம் மேற்கொண்டுவருகிறது.

தமிழர் தாயகப் பகுதி முழுமைக்கும் சர்வதேச மன்னிப்புச்சபையின் கண்காணிப்புக்குழுவினர் பயணம்செய்து, மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச விதிமுறைகளுக்கு எதிராக சிறார்கள் படையில் சேர்க்கப்பட்டுள்ளனரா என்பது குறித்தும், விடுதலைப் புலிகள் மீதான படுகொலைக் குற்றச்சாட்டுக்கள் குறித்தும் உரிய விசாரணை நடத்தலாம் என்று அழைப்பு விடுக்கிறோம்.

மேலும் - அரசாங்கம், ஊடகங்கள் மற்றும் பேரினவாத சக்திகளின் ஒரு பக்கச்சார்பான குற்றச்சாட்டுக்களை விட - தமிழர் தாயகத்தில் இயங்கும் மக்கள் அமைப்புக்கள், மதத் தலைமைகள், அரசசார்பற்ற நிறுவனங்களுடன் விவாதித்து உண்மைத் தன்மைகளைக் கண்டறிய வேண்டியது அவசியமானது என தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் வடக்கு - கிழக்கு மனித உரிமைச் செயலகமான நிசோர் பிரதிநிதிகளையும் சந்தித்த சர்வதேச மன்னிப்புச்சபையின் செயலாளர் நாயகம் ஐரெனி சுபைடா கான் - நிசோரின் செயற்பாடுகளையும் கேட்டறிந்தார்.

நிசோர் அமைப்பின் பணியாளர்கள் எண்ணிக்கை, நிசோருக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள், தீர்வுகாணப்பட்ட முறைப்பாடுகளின் விபரங்களையும் அவர் கேட்டறிந்தார்.

முறைப்பாடுகளுக்குத் தீர்வு காணப்பட்டது எவ்வாறு என்பதையும் நிசோர் பிரதிநிதிகள் ஐரெனி சுபைடா கானுக்கு விளக்கினர்.

மனித உரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலான உத்தேச தமிழீழச் சட்டங்கள் குறித்தும் இந்தச் சந்திப்பின் போது விளக்கப்பட்டது.

அத்துடன், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசனையும் இவர் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

# யாழ்.குடாநாட்டின் பதற்ற நிலையைத் தணிக்க கண்காணிப்புக்குழு நடவடிக்கை எடுக்கவேண்டும்

## ஈழவேந்தன் எம்.பி. வேண்டுகோள்

யாழ்ப்பாணம்—

யாழ்.குடாநாட்டில் பொதுமக்கள்மீது இராணுவத்தினர் மேற்கொண்டுவரும் கண்மூடித்தனமான தாக்குதல்களை உடன்நிறுத்த போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல் குடாநாட்டு நிலைமை மேலும் மோசமடையும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று பிற்பகல் 2 மணிக்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்ட தலைவர் ஜோன் அஸ்பிலனை அவரது அலுவலகத்தில் சந்தித்தபோதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பின் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

யாழ்.குடாநாட்டில் இராணுவ வெறியாட்டம் உத்வேகம் அடைந்துள்ளது. திருநெல்வேலிச் சந்திக்கு அருகாமையில் உள்ள ஆலடிச் சந்தியில் உள்ள தையலகம், பாதணியகம், நகையகத்தில் பணிபுரியும் நால்வரை இராணுவ முகாம் மீது கைக்குண்டு வீசியதாகக் குற்றம்சாட்டி அவர்களை அடித்துத் துன்புறுத்திய செய்தியை மேற்குறித்த கடைகளின் உரிமையாளர்களும், அப்பகுதியில் இயங்குகின்ற சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் உறுப்பினர்களும் எனக்குத் தெரியப்படுத்தினர்.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் இந்த வணிக நிலையங்களில் பணிபுரியும் ஊழியர்கள் கடும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். இந்தச் செய்தி கிடைத்தவுடனேயே யாழ்ப்பாணம் கோவில் வீதியில் இயங்குகின்ற போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜோன் அஸ்பிலனுடன் தொடர்புகொண்டு உடனடியாக இராணுவத் தலைமைப்பீடத்துக்கு அறியச் செய்து ஆவனசெய்யுமாறும், உரிய நடவடிக்கை எடுக்காவிடின் நிலைமை மோசமடையும் என்பதையும் தெரிவித்தேன்.

நீர்வேலியில் இராணுவமும், ஆயுதக் குழுக்களும் துப்பாக்கியால் சுட்டதன் விளைவாக மூவர் உயிரிழந்தனர் என்பதை எடுத்துக் கூறிய போது அஸ்பிலன் - இந்த இழப்புகள் உண்மை என்பதை நாம் ஏற்கின்றபோதும், இந்தத் தாக்குதலை இராணுவமோ, ஆயுதக் குழுக்களோ நடத்தியது என்பதற்கான போதிய சட்டச்சான்றுகள் இல்லை என்று கூறினார்.

ஆயுதக் குழுக்களும் இராணுவமும் சேர்ந்து இந்தக் கொடிய தாக்குதலை நடத்தியதற்கான போதிய சான்றுகள் எம்மிடம் உண்டு. சிங்கள இராணுவம் எம்மண்ணிலிருந்து வெளியேறும் வரையில் இத்தகைய உயிரிழப்புகளும் படுகாயங்களும் ஏற்படுமென எடுத்துரைத்தேன்.

எனவே, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தத்துவ விளக்கங்களில் ஈடுபடாது உடனடியாகத் தலையிட்டு மோசமடையும் இந்த ஆபத்தான சூழ்நிலைக்கு முடிவுகட்டவேண்டும் என்று வேண்டுகோளை விடுத்ததாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழர் தாயக விடுதலைப் போராட்டத்தை நசுக்கும் அரசின் நப்பாசை நிறைவேறாது!

## கோப்பாய் பிரதேச பொது அமைப்புகளின் ஒன்றியம்

யாழ்ப்பாணம்—

தமிழ் மக்களை அடிமைப்படுத்தி, தமிழர் தாயக விடுதலைப் போராட்டத்தை நசுக்கி விடலாமென்று அரசாங்கம் நப்பாசை கொண்டுள்ளது. இந்த அற்ப ஆசை ஒருபோதும் நிறைவேறமாட்டாதென்பதை எதிரியவனுக்கு கூறி வைக்க விரும்புகின்றோமென - அப்பாவி பொதுமக்களின் படுகொலைகளைக் கண்டித்து கோப்பாய் பிரதேச பொது அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

தமிழர் தாயகப் பகுதிகளில் தனது ஆதிக்கத்தை ஏற்படுத்தி நிலைகொண்டிருக்கும் சிங்கள அரச படைகளினதும் அவர்களுடன் ஒட்டிக் கொண்டு இருக்கும் தேச விரோதக் கும்பல்களினதும் அடாவடித்தனங்கள் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன .

தமிழ்மண் பற்றாளர்களையும், ஆதரவாளர்களையும், எழுச்சி நிகழ்வில் முன்னின்று செயற்படுபவர்களையும், கல்விமான்களையும், தமிழ் மண் மீது பற்றுக்கொண்டு போராட்டத்துக்கு உந்து சக்தியாக விளங்கும் பொது மக்களையும் இலக்குவைத்து மிகக் கொடூரமான தாக்குதல்களை அண்மைக் காலங்களில் அரங்கேற்றி வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக அண்மையில் நடைபெற்ற மாவீரர் தின நிகழ்வின்போது நீர்வேலிப் பகுதியில் அலங்கார வேலைகளை முன்னின்று நடத்திய இளைஞர் ஒருவர் இராணுவ புலனாய்வுப் பிரிவினராலும், அதனுடன் சேர்ந்தியங்கும் தமிழ்த் தேசவிரோத கும்பல்களினாலும் சுடப்பட்டு படுகாயமடைந்தது பலரும் அறிந்த விடயம்.

மீண்டும் இவர்கள் தமது அராஜகத்தைத் தொடர்ந்த வண்ணம் உள்ளார்கள். கடந்த முதலாம் திகதி நீர்வேலிப் பகுதியில் தமது அன்றாட கடமைகள் தொடர்பாக நண்பர்களுடன் உரையாடிக்கொண்டிருந்த அப்பாவி இளைஞர்கள் மீது படையினரும், அவர்களுடன் சேர்ந்து இயங்கும் தமிழத் தேச விரோத கும்பல்களும் இணைந்து மிலேச்சத்தனமான துப்பாக்கிப் பிரயோகங்களை நடத்தினர். இதில் இரண்டு இளைஞர்கள் அந்த இடத்திலேயே துடிதுடித்து மரணமானார்கள். இன்னொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இவ்வாறான தாக்குதல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் தமிழ் மக்கள் போராட்டத்தின் பால் ஈர்க்கப்படுவதைத் தவிர்க்கலாம் என்று தமிழ் மக்களை அடிமைப்படுத்தி, தமிழர் தாயக விடுதலைப் போராட்டத்தை நசுக்கிவிடலாம் என்று அரசாங்கம் நப்பாசை கொண்டுள்ளது. இந்த அற்ப ஆசை ஒருபோதும் நிறைவேறமாட்டாது என்பதை எதிரிக்குச் சொல்லிவைக்க விரும்புகின்றோம்.

அரச படைகளே! தமிழ் விரோத குழுக்களே! இது நாம் உங்களுக்கு விடும் எச்சரிக்கையாக அமையட்டும். இவ்வாறான அடாவடித்தனங்களை தொடர்ந்தும் அரங்கேற்றுவீர்களானால் விளைவுகள் விபரீதமாக அமையும். புரிந்துணர்வு ஒப்பந்த உடன்படிக்கையின்படி தமிழர் தாயகப் பிரதேசங்களில் நிலைகொண்டுள்ள ஆக்கிரமிப்புப் படையினர் படிப்படியாக வெளியேறவேண்டும்.

மாறாக இராணுவத்தினர் புதிய முகாம்களையும், காப்பரண்களையும் அமைத்து பொது மக்களின் அன்றாட வாழ்வுக்கு துன்பங்கள் விளைவித்து வருகின்றனர். ஒரு இனத்தின் விடுதலைப் போராட்டம் அந்த இனத்தின் மக்களின் கைகளில்தான் தங்கியுள்ளது. மக்கள் சக்தி மாபெரும் சக்தியாக உள்ளதென்பதை புரிந்துகொள் இராணுவமே! தமிழ்த் தேச விரோத குழுக்களே!

உங்களின் அராஜகத்தை உடனடியாக நிறுத்தாவிட்டால் மக்கள் திரண்டெழுந்து உங்களுக்கு எதிராக கைகளில் ஆயுதம் ஏந்தும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் என்பதை இதற்காக எமது விடுதலைப் போராட்டத்தின் உந்து சக்தியாக உள்ள மக்கள் படைக்கட்டுமானம் தங்களுக்கு தகுந்த பதிலடி கொடுக்கும் என்பதை தங்களுக்குப் புரிய வைக்கும் காலம் வெகுதூரமில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
கலைப்பீடம்

பத்திரிகையியல் டிப்ளோமா (முழுநேரக்) கற்கை நெறிக்கான அனுமதி - 2006

2004ஆம், 2005ஆம் ஆண்டுகளில் க.பொ.த. (உயர் தரத்) தேர்வில் சித்தியடைந்ததுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் தகுதி பெற்றோரிடமிருந்து ஓராண்டு முழுநேரப் பத்திரிகையியல் டிப்ளோமாக் கற்கைநெறி அனுமதிக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

அனுமதிக்கான தெரிவுமுறை : எழுத்துத் தேர்வும் (எழுத்து ஆற்றல், அறிக்கையிடும் திறன், மொழியாற்றல், சமூக அறிவு) நேர்முகத் தேர்வும்.

| | | | |
|---|---|---|---|
| கட்டணங்கள் | கற்கைநெறிக் கட்டணம் | ரூபா | 20,000.00 |
| | பதிவுக் கட்டணம் | ரூபா | 750.00 |
| | நூலக வைப்புப் பணம் (மீளளிக்கத்தக்கது) | ரூபா | 750.00 |
| | நூலகப் பயன்பாடு | ரூபா | 1000.00 |
| | மொத்தம் | ரூபா | 22,000.00 |

விண்ணப்பப் படிவங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப் பீடாதிபதி அலுவலகத்தில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் காசாளர் கருமபீடத்தில் ரூபா 100/- செலுத்திப் பெற்ற பற்றுச் சீட்டினைச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப்படிவங்கள் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்: முதுநிலை உதவிப் பதிவாளர், கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி : 17.12.2005

விண்ணப்பதாரிகள் எல்லோரும் 18.12.2005 காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறும் எழுத்துத் தேர்வுக்குத் தோற்ற வேண்டும்.

-பதிவாளர்

(C/4876)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# வெள்ளியன்று தாக்குதல்களில் ஐந்து படையினர் காயம்!

கொழும்பு—

தென்மராட்சி மற்றும் வடமராட்சிப் பகுதிகளில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் 5 படையினர் காயமுற்றதாக இராணுவத் தலைமையகம் தெரிவித்தது.

சாவகச்சேரியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.35 மணியளவில் இராணுவத்தினரின் பதுங்குகுழி ஒன்றின்மீது இரண்டு கிரனேட்டுகள் வீசப்பட்ட சம்பவத்தில் 2 படையினர் காயமடைந்தனர். கோப்ரல் விதான வாசம் மற்றும் ராஜவர்த்தன ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

பின்னர் பிற்பகல் 4.15 மணியளவில் இதே காவலரண்மீது நடத்தப்பட்ட தாக்குதலில் திஸநாயக்க என்ற சிப்பாய் காயமடைந்தார்.

இதேவேளை, மீசாலை தெற்கில் நேற்றுமுன்தினம் மாலை 5.10 மணியளவில் நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில் தர்மரத்ன என்ற சிப்பாய் கால்களில் படுகாயமடைந்தார்.

இதேவேளை வடமராட்சி - மந்திகையிலுள்ள ஈ.பி.டி.பி. அலுவலகம் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் பியதாஸ என்ற இராணுவச் சிப்பாய் காயமடைந்தார்.

காயமுற்ற 5 படையினரும் பலாலி இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

# படையதிகாரிகளின் ஓய்வு குறித்த சந்திரிகாவின் வர்த்தமானி; இரத்துச் செய்தார் மகிந்த!

கொழும்பு—

முப்படையைச் சேர்ந்த அதிகாரிகளின் ஓய்வுபெறும் வயதை நீடித்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பிறப்பித்திருந்த உத்தரவுகளை புதிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த 28 ஆம் திகதி இரத்துச் செய்தார்.

இராணுவ அதிகாரிகள் ஓய்வு பெறும் வயதெல்லையை 2005.10.25 ஆம் திகதிமுதல் மாற்றம் செய்து 1416/11 இலக்க வர்த்தமானி அறிவித்தலைச் சந்திரிகா வெளியிட்டிருந்தார்.

எனினும் அந்த உத்தரவை இரத்துச் செய்த மகிந்த ராஜபக்ஷ 2005.11.28 ஆம் திகதி 1416/11 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டார்.

சந்திரிகா வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய இராணுவ ஜெனரல் மற்றும் லெப்டினன்ட், ஜெனரல் பதவிகளுக்கான வயது 60 வரையும் மேஜர் ஜெனரல்களின் ஓய்வு பெறும் வயது 58 வரையும், பிரிகேடியர் ஓய்வுபெறும் வயது 56 வரையும் நீடிக்கப்பட்டிருந்தது.

கேணல் மற்றும் அதற்குக் கீழுள்ள பதவிகளைச் சேர்ந்தவர்களின் ஓய்வுபெறும் வயது 55 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த அனைத்து அறிவித்தல்களையும் மகிந்த ராஜபக்ஷ புதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் இரத்துச் செய்துள்ளார்.

## கிளிநொச்சி விபத்தில் காயமுற்றவர் மரணம்

யாழ்ப்பாணம்—

கிளிநொச்சிப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்தவர் நேற்றிரவு யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி இராசநாயகம் (வயது 55) என்பவரே உயிரிழந்தவராவார்.

தலை மற்றும் கைப்பகுதியில் பலத்த காயமடைந்த இவர் கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்ட இவர் நேற்றிரவு 8.20 மணிக்கு சிகிச்சை பலனளிக்காது உயிரிழந்தார்.

## தமிழ் இளைஞர்...

முஸ்லிம் ஆயுதக் குழுவால் வெட்டப்பட்டு எரிக்கப்பட்டனர். அத்துடன் ஓட்டோவும் அடித்து நொருக்கப்பட்டு எரிக்கப்பட்டது.

இதேவேளை, சம்பூரிலிருந்து மூதூருக்குச் சென்ற இரண்டு தமிழ் இளைஞர்கள் மீளவும், மூதூருக்கு திரும்பி வரவில்லையெனவும், மூதூர் - மட்டக்களப்பு பிரதான வீதியில் சென்ற பஸ்ஸை பெரியபாலம் எனுமிடத்தில் வழிமறித்த சிலர், அதிலிருந்து தமிழ் இளைஞர்கள் சிலரை இறக்கி தம்முடன் அழைத்து சென்றதாகவும், அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவங்களை அடுத்து தோப்பூர் கடும் பதற்றமான சூழலில் உள்ளது. இதனையடுத்து அங்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இதேவேளை, மக்கள் எவரையும் வீடுகளைவிட்டு வெளியே வரவேண்டாமென பள்ளிவாசல்கள் ஒலிபெருக்கி மூலம் நேற்றைய தினம் அறிவித்த வண்ணமிருந்தனர்.

(10, 4)

## 16ஆம் திகதி....

வெளியிடப்படவில்லை. வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவின் இந்தியப் பயணத்தின்போது இ[illegible] தொடர்பாக முடிவெடுக்கப்பட்டதாகவும், இதையடுத்து டிசெம்பர் 16 ஆம் திகதி மகிந்த ராஜபக்ஷ இந்தியா செல்வார் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அவர் மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டு விஜயம் இந்தியாவுக்கு என்பது குறிப்பிடத்தக்கது.

## விமல் வீரவன்ச...

பொலிஸ் தலைமையகத்தால் வழங்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தலைமையக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# இராணுவத்தினரை..

### சாவகச்சேரியில்....

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அண்மையில் நேற்று மாலை ட்ரக்கில் சென்றுகொண்டிருந்த படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகின்றபோதும் இந்தச் சம்பவத்தை உறுதிப்படுத்த முடியவில்லை.

### மீசாலையில்....

அதேவேளை மீசாலைப் பகுதியில் நேற்று நடத்தப்பட்ட மூன்று கிரனேட் தாக்குதல் சம்பவங்களில் மூன்று படையினர் காயமுற்றதாகவும் தெரியவருகிறது.

மீசாலைச் சந்தியில் இரண்டு தாக்குதல் சம்பவமும், மீசாலை இராணுவ முகாமை இலக்கு வைத்து இன்னொரு தாக்குதலும் நடத்தப்பட்டன. இந்தச் சம்பவங்களில் காயமுற்ற படையினர் புத்தூர்ச் சந்தி இராணுவ முகாமிலிருந்து ஹெலிகொப்ரர் மூலம் பலாலி இராணுவ வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

### கோண்டாவிலில்...

நேற்று நண்பகல் 12.30 மணியளவில் யாழ் - பலாலி வீதியில் கோண்டாவில் சந்தி இராணுவ காவலரண் மீது இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப்பிரயோகம்மேற்கொண்டனர்.

இதனையடுத்து படையினரும் பதிலுக்குத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இந்தச் சம்பவத்தில் படையினருக்கு சேதங்கள் ஏற்பட்டதா என்பது தெரியவரவில்லை.

### ஆலடிச் சந்தியில்...

யாழ் - பலாலி வீதியில் - திருநெல்வேலி, ஆலடிச் சந்தி இராணுவக் காவலரண் மீது நேற்றுப் பிற்பகல் கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து, அந்தப் பகுதியில் பொதுமக்கள் கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டதுடன் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்தார்.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் ஆலடிச் சந்தி காவலரண் மீது கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் இராணுவத்தினருக்கு இழப்புக்கள் ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

சம்பவத்தின் பின்னர் இராணுவத்தினரின் இரண்டு அம்புலன்ஸ் வண்டிகள் அந்தப் பகுதிக்கு வந்து சென்றதாகக் கூறப்படுகிறது.

அதேவேளை, இந்தச் சம்பவத்தையடுத்து படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் அளவெட்டி கிழக்கைச் சேர்ந்த நவரட்ணம் கோபாலராஜ் (வயது 29) என்ற இளைஞர் காயமடைந்தார்.

இவர் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தையடுத்து பரமேஸ்வராச் சந்தி, ஆலடிச் சந்திப் பகுதிகளில் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டதுடன், வீதியில் சென்றவர்கள் படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டனர்.

இதனால் இந்தப் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டதுடன் வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டன.

இதேவேளை, நேற்றுமாலை கந்தர்மடம் சந்தி இராணுவக் காவலரண் மீது கிரனேட் ஒன்று வீசப்பட்டதாகவும் அது வெடிக்காததால் சேதங்கள் ஏற்படவில்லை எனவும் செய்திகள் தெரிவித்தன.

### பருத்தித்துறை...

நெல்லியடி - மாலிசந்திப் பகுதியிலுள்ள ரெலிக்கொம் அலுவலகத்துக்கு முன்பாக காவலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த படையினர் மீது நேற்றுமாலை நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில் மூன்று படையினர் படுகாயமடைந்தனர்.

யாழ் - பருத்தித்துறை வீதியில் உள்ள மாலிசந்தி ரெலிக்கொம் அலுவலகத்தில் காவலில் ஈடுபட்டிருந்த படையினரை இலக்குவைத்து மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இனந்தெரியாதநபர்கள் கைக்குண்டுஒன்றை வீசிவிட்டுச் சென்றனர்.

நேற்றுமாலை 6 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் 3 படையினர் படுகாயமடைந்தனர். மெதகெதர (வயது 21), சமரசிங்க (வயது 31), ஜெயசிங்க (வயது 26) ஆகியோரே படுகாயமடைந்தனர்.

இவர்கள் உடனடியாக இராணுவத்தினரின் அம்புலன்ஸ் மூலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் பலாலி இராணுவ வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.

தாக்குதல் நடந்த பின்னர் காயமுற்ற படையினரை வைத்தியசாலைக்குக் கொண்டுசென்ற அம்புலன்ஸுக்குப் பாதுகாப்பாக பிக்கப் வாகனத்தில் வந்த படையினர் வழியில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடியே சென்றதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, மாலிசந்திப் பகுதியில் கராஜ் ஒன்றில் வேலைசெய்தோர் மற்றும் மோட்டார் சைக்கிளில் அந்த வழியால் வந்த சிலரையும் படையினர் தடுத்துவைத்திருந்ததாகத் தெரியவருகிறது.

இந்தப் பகுதியூடாக பஸ் மற்றும் ஏனைய வாகனங்களில் பயணம் செய்த பலரும் படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

### அரியாலையில் ...

நேற்றிரவு 7.00 மணியளவில் அரியாலை மாம்பழம் சந்திப் பகுதியில் தண்ணீர் விநியோகத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இராணுவ பவுசர் மீது இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலில் இராணுவ சிப்பாய் ஒருவர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

### சுண்டுக்குளியில்...

சுண்டுக்குளிப் பகுதியில் நேற்றிரவு 7.15 மணியளவில் இராணுவ காவலரண் மீது இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இராணுவ சிப்பாய் ஒருவர் காயமடைந்ததாகத் தகவல்கள் தெரிவித்தன.

### பருத்தித்துறையில் ...

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு அருகிலுள்ள காவலரண் மீதும் நேற்று அதிகாலை 4 மணியளவில் கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இதில் இராணுவத்தினர் ஒருவர் காயமடைந்ததாகவும் இன்னொரு செய்தி தெரிவித்தது. (14, 12)

# பொறிக்குள்...

இவற்றிலிருந்து விலகிக் கொள்ளவே அவர் விரும்புகிறார். எனவே இந்தியா மீண்டும் இந்தப் பொறிக்குள் விழுந்துவிடக்கூடாது.

தற்போதைய சமாதான முயற்சிகளில் நோர்வே மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது. எனவே நோர்வேயின் செயற்பாட்டை தொடர்ந்து அனுமதிப்பதுடன் இந்தியா இதற்கு உதவும் வகையில் மட்டுமே செயற்படவேண்டும்.

1987 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை இனப்பிரச்சினைக்கு இந்தியா தீர்வொன்றைக்காண முயன்றபோதும் அது பின்னர் பேரழிவிலேயே முடிவுற்றது.

இலங்கைத் தீவில் சமாதானத்தை ஏற்படுத்தும் ஆர்வமுடையவராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இல்லை. அவரது மனநிலை வேறாகத்தான் உள்ளது. எனவே இது தொடர்பாக அண்மையில் பிரதமர் மன்மோகன்சிங் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோரைச் சந்தித்த போது இலங்கை நிலைமை குறித்து சுருக்கம[illegible] எடுத்து விளக்கியுள்ளேன் என்று[illegible] அவர் மேலும் தெரிவித்தார்.

### நீர்வேலியில்...

சம்பவத்தில் இறந்தவர்களின் இறுதிக்கிரியைகள் நாளை நடைபெறவுள்ளதாக அவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.


## முக்கிய அறிவித்தல்

### அதிபர்களே! மாணவ மணிகளே!

எங்கள் ஸ்தாபனத்தில் பொருட்களைக் கொள்வனவு செய்யவேண்டாம் என்று ஒருசில அதிகாரிகள் ஏதோ உள்நோக்கத்துடன் பிரசாரம் செய்து வருவதாக அறிகின்றோம்.

ஒரே கூரையின்கீழ் எல்லாவிதமான பொருட்களையும் பெற்றுக்கொள்ளக்கூடியது எமது ஸ்தாபனம். எங்கள் ஸ்தாபனம் 1959 ஆம் ஆண்டுதொடக்கம் கடந்த 46 வருடங்களுக்கு மேலாக கல்விச் செல்வத்தை அள்ளி வழங்குவதுடன், இலங்கைத் தீவு பூராகவும் லட்சக்கணக்கான வித்தகர்களை உருவாக்கிய ஸ்தாபனம். லாபநோக்குடன் நடத்தப்படும் ஸ்தாபனம் அல்ல. இது ஒரு வரையறுக்கப்பட்ட தர்ம ஸ்தாபனத்தின் கிளை ஸ்தாபனம் என்பதை அறியத்தருகின்றோம்.

உரிமையாளர் : ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்,
இல.212, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 - 222 5542

Prop : A.C.D.I Ltd,
P.O Box : 96,
No.371, Dam Street,
Colombo - 12.
(C/4897)


## மரண அறிவித்தல்



### சின்னையா சிவகரன் (சிவா)

மாவிட்டபுரம் சாயுடையை பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சிவகரன் 01.12.2005 அன்று காலமானார்.

இவர் ஜெயமகளின் அன்புக் கணவரும், தயூராவின் அன்புத் தந்தையும், சின்னையா (கந்தசாமி) சத்தியபாமாவின் அன்பு மகனும், சிவநேசன் (பிரான்ஸ்), சிவயோகன், சிவபதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் அருணாசலம் சுபத்திராதேவியின் (லண்டன்) அன்பு மருமகனும், முகுந்தன் (லண்டன்), சிறீமகள் (கனடா), நாமகள் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அளவெட்டி வடக்கு, அளவெட்டியில் உள்ள எமது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 1.00 மணிக்கு பூதவுடல் கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

அளவெட்டி வடக்கு.
அளவெட்டி.

தகவல்:
பொ.சத்தியநாதன்
(மாமனார்)

(2128)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 04.12.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.